# உதயன்

சுடர் : 36 கதிர் : 229 | செவ்வாய்க்கிழமை | ஆனி 29 ஆம் நாள் 13 ஜூலை 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111




## எனக்கு எவரும் கட்டளையிட முடியாது

### ஆளும்கட்சி முக்கியஸ்தர்களிடம் ஜனாதிபதி கோத்தாபய சீற்றம்

கொழும்பு, ஜூலை 13

அமைச்சுப் பதவியை யாருக்கு வழங்க முடியும், யாருக்கு வழங்கக்கூடாது, அமைச்சரவையிலிருந்து யாரை நீக்க வேண்டும் என்பவை தொடர்பில் எனக்குத் தெரியும். எனக்குரிய அதிகாரத்தை உரிய முறையில் பயன்படுத்துவேன். எனக்கு எவரும் கட்டளையிட முடியாது.

19 ►

## இணைய வழிமுறை கல்வி படுதோல்வி

### ஆசிரிய சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 13

மாணவர்களின் இணையவழிக் கல்வியில் அரசு படுதோல்வியை சந்தித்துள்ளது என்று இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்டக் கிளையினர், நேற்று நடத்திய சந்திப்பில் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இது குறித்து சங்கத்தின் உப தலைவர் தீபன் தலீ

19 ►



## 345 கிலோ கஞ்சாவுடன் யாழில் மூவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை கடல் பகுதியில் 344 கிலோ 560 கிராம் நிறையுடைய கஞ்சா, பொதிகளாக நேற்று மீட்கப்பட்டுள்ளது. அவற்றை கடல் மூலமாக

19 ►



## அரசுக்கு எதிராக நேற்றும் போராட்டம்

கொழும்பு, ஜூலை 13

அரசுக்கு எதிராக கொழும்பில் நேற்றும் ஆர்ப்பாட்டமும் பேரணியும் முன்னெடுக்கப்பட்டன.

ஜோன் கொத்தலாவல தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழக சட்டவரைவுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் சட்டவிரோத கைதுகளை கண்டித்தும் கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தில் இது

19 ►

## சாவு 31 தொற்று 1,488

கொழும்பு, ஜூலை 13

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 31 பேர் உயிரிழந்துள்

19 ►


## பாடசாலைகளை மீளத் தொடங்கும் ஆரம்ப நடவடிக்கை ஓகஸ்ட்டில்

### கல்வி அமைச்சர் பீரிஸ் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 13

ஆசிரியர்களுக்கு தடுப்பூசி செலுத்திய பின்னர் பாடசாலைகளைத் திறப்பதற்கு ஓகஸ்ட் மாதத்தில் ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

19 ►



## செல்பி எடுத்த 16 பேர் மின்னல் தாக்கி சாவு

டில்லி, ஜூலை 13

இந்திய ராஜஸ்தான் மாநிலத்தின் தலைநகர் ஜெய்ப்பூரில் உள்ள கோட்டை ஒன்றில் செல்பி எடுத்துக் கொண்டிருந்த 16 பேர் மின்னல் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. இவர்கள் உட்பட, இந்தியாவின் வட மாநிலங்களில் இடிமின்னல் தாக்கு

19 ►

### வீட்டுத்திட்ட முறைப்பாடுகள் பற்றி ஆராய

## பிரதமரின் இணைப்புச் செயலாளர் யாழ். மாவட்டத்துக்கு களப்பயணம்



யாழ்ப்பாணம், ஜூலை 13

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான மீள்குடியேற்ற இணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள, பிரதமரின் இணைப்புச் செயலாளர் கீதநாத் காசிலிங்கம் நேற்று யாழ்ப்பாணம் மாவட்டத்துக்குக் களப் பயணம் மேற்கொண்டார். தற்போது யாழ்ப்பாணம்

19 ►

### அத்தியாவசிய சேவைகளுக்காக

## மாகாணங்களுக்கிடையிலான பொதுப்போக்குவரத்து ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 13

மாகாணங்களுக்கு இடையில் பொதுப் போக்குவரத்துச் சேவையை செயற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது எனப் போக்குவரத்து மற்றும் சமுதாய பொலிஸ் சேவைகள் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

19 ►

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஆடைத்தொழிற்சாலைப் பணியாளர்களின்
# உரிமையைப் பாதுகாக்க வேண்டும்
## மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து

**கொழும்பு, ஜூலை 13**

**இலங்கையின் ஆடைத்தொழிற்சாலைகளில் பணிபுரியும் ஊழியர்கள் வெறுமனே அவர்களது குடும்பங்களுக்கான வருமானத்தை மட்டும் ஈட்டவில்லை. மாறாக நாட்டின் பொருளாதாரத்துக்கு பெரும் பங்களிப்பை வழங்கி வருகின்றனர். எனவே அவர்களது உரிமைகளை உறுதிப்படுத்தப்பட வேண்டும் இவ்வாறு மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.**

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் ஆடைத்தொழிற்சாலைகளில் பணிபுரியும் ஊழியர்களின் சுகாதாரப் பாதுகாப்பையும், உரிமைகளையும் உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தொழிற்சாலைகள் மற்றும் ஊழியர்கள் தங்கும் விடுதிகளில் கொரோனா வைரஸ் பரவல் கொத்தணிகள் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

எனவே தொழிற்சாலை ஊழியர்கள் பாதுகாப்பான சூழலில் பணிபுரிகின்றமை உறுதிப்படுத்தப்பட வேண்டும். அவர்கள் சுகவீனமடைந்தாலோ அல்லது தனிமைப்படுத்தப்பட வேண்டிய நிலைக்குள்ளானாலோ அவர்களுக்குரிய ஊதியம் உரியவாறு வழங்கப்பட வேண்டும்.

தொழிற்சாலைகளில் ஏற்படக்கூடிய கொரோனா வைரஸ் பரவல் தொடர்பில் வெளிப்படைத்தன்மையுடன் செயற்பட வேண்டும். மேலும் தமக்குரிய உரிமைகளைக் கோரும் ஊழியர்கள் மீது அடக்குமுறைகளைப் பிரயோகித்து, அவர்களை அடக்குவதற்குப் பதிலாக அவர்களுக்குரிய வசதிகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

அதேபோன்று ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்கு அரசால் தடைவிதிக்கப்பட்டு இருநாள்களின் பின்னர் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்குமாறு வலியுறுத்தி கடந்த 8ஆம் திகதி கொழும்பில் தொழிற்சங்கவாதிகளால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் பொலிஸாரால் அடக்கப்பட்டது. அதில் ஈடுபட்டவர்கள் வற்புறுத்தலின் பேரில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் பொறுப்பை இராணுவத்திடம் கையளித்திருக்கும் நிலையில், தனிமைப்படுத்தல் நிலையங்களும் இராணுவத்தின் கீழேயே இயங்குகின்றன.

இவ்வாறானதொரு பின்னணியில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகும் தொழிற்சாலை ஊழியர்களை உரிய பாதுகாப்புடன் தனிமைப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை அரசும், தொழிற்சாலை உரிமையாளர்களும் மேற்கொள்ள வேண்டும். அதேவேளை அக்காலப்பகுதியில் அவர்களுக்குரிய கொடுப்பனவு முழுமையாக வழங்கப்படுகின்றது என்பதையும் உறுதி செய்ய வேண்டும் - என்றுள்ளது. (ம-4)

## தனியார் தொலைக்காட்சி அலைவரிசை குறித்து ஆராய்வு



கொழும்பு, ஜூலை 13

வழக்கறிஞர் குழுவொன்று அழைத்துவரப்பட்டு தனியார் தொலைக்காட்சி அலைவரிசைகள் குறித்துக் கலந்துரையாடப்பட்டது என்று ஊடக அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

கண்டியில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் அவர் ஊடகங்களுக்கு மேலும் தெரிவித்ததாவது;

ஊடக சுதந்திரம் மற்றும் அது தொடர்பான சட்டங்கள் தொடர்பில் எவரும் குழப்பமடையத் தேவையில்லை. இலங்கையில் காணப்படும் ஊடக சுதந்திரம்போல உலகில் வேறு எந்தவோர் இடத்திலும் இல்லை.

ஒரு தனியார் தொலைக்காட்சி அலைவரிசையின் நடவடிக்கைகள் குறித்து விவாதிக்க நாட்டில் பல சக்திவாய்ந்த வழக்கறிஞர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர். அந்த அலைவரிசைக்கு எதிராக நியாயமான சட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

நாடாளுமன்றக் கூட்டத்தொடர் ஒன்றின்போது இதனை ஒரு பரப்புரையாக எதிர்க்கட்சித் தலைவர் எடுத்துப் பேசியிருந்தார்.

ஊடக சுதந்திரம் நாட்டின் அடிப்படை சட்டத்துக்கு உட்பட்டது. ஊடக முதலாளிகள் பத்திரிகை சுதந்திரத்துக்கு ஏற்ற வகையில் செயற்பட்டால், நாமும் சட்டத்தின் கட்டமைப்புக்குள் செயற்படுவோம்.

சில நாள்களுக்கு முன்னர் நடைபெற்ற குறித்த கலந்துரையாடல் ஒருதலைப்பட்சமாக நடைபெற்ற கலந்துரையாடல் அல்ல. பல தனியார் தொலைக்காட்சி அலைவரிசைகளை மையமாகக்கொண்டு நடைபெற்ற ஒரு கூட்டம் - என்றார். (து-சி)

# கூட்டணிக்குள் முரண்பாடில்லை
## மார்தட்டுகிறார் சுசில்



கொழும்பு, ஜூலை 13

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், பொதுஜன பெரமுனவுக்கும் கூட்டணி அடிப்படையில் எவ்வித முரண்பாடுகளும் கிடையாது என்று தொலைநோக்குக் கல்வி இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இரு தரப்பின் உறுப்பினர்களுக்கும் இடையில் காணப்படும் தனிப்பட்ட முரண்பாட்டை கூட்டணியின் முரண்பாடு என்று குறிப்பிடுவது முற்றிலும் தவறானதாகும். கூட்டணியின் ஊடாக ஒன்றிணைந்ததனால்தான் கடந்த காலங்களில் இடம்பெற்ற தேசிய தேர்தல்களில் வெற்றிப்பெற முடிந்தது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் புறக்கணிக்கும் வகையில் பொதுஜன பெரமுனவின் இளம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருத்துரைப்பது வெறுக்கத்தக்கது. இராஜாங்க அமைச்சர்கள் ஒரு சிலரின் வெறுக்கத்தக்கப் பேச்சுக்கள் தேவையில்லாத பிரச்சினைகளை தற்போது தோற்றுவித்துள்ளது.

இரு தரப்பினரும் பொறுப்புடன் செயற்பட்டால் எவ்வித பிரச்சினையும் ஏற்படாது - என்றார். (ம-4)

# நாய்கள் குரைப்பதால் பயணத்தை நிறுத்தேன்
## கம்மன்பில பதிலடி

கொழும்பு, ஜூலை 13

அரசியலிருந்து நான் வெளியேற்றப்படும் பட்சத்தில் மக்களின் மடியில் தான் விழுவேன். நாய்கள் குரைக்கட்டும். அவற்றின் மீது கல்வீச்சு தாக்குதல் நடத்துவதற்கு நின்றால் எனது பயணமே தடைப்படும். எதற்காகவும் என்னை மாற்றிக்கொள்ளப் போவதில்லை என்று வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஊடகவியலாளர் மாநாட்டில் பங்கேற்றிருந்த அமைச்சர், வேகப்பந்து வீச்சாளர்கள், சுழல்பந்து வீச்சாளர்கள் என அனைவரும் பங்கேற்றுள்ளீர்கள் என ஊடகவியலாளர்களை நோக்கி புன்னகையுடன் விளித்தார்.

இதன்போது நீங்கள் ஆட்டமிழந்துவிடுவீர்கள் போல உணர்கின் [illegible] இதற்கு பதிலளித்த அமைச்சர், அப்படியா? ஆட்டமிழக்க வைப்பதற்கு தீவிர முயற்சிகள் இடம்பெறவே செய்கின்றன. ஆனாலும் ஆட்டமிழக்காது ஆடிவருகின்றேன். எல்லாப் பந்தையும் அடித்தாடமல் இருப்பதுதான் நீண்டதொரு இன்னிங்ஸின் இரகசியம். என்றார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஜூன் மாதம் 13ஆம் திகதி அறிவிப்பொன்றை விடுத்தார். ஜனாதிபதியின் தலைமையில் பிரதமரின் பங்குபற்றலுடன் நடைபெற்ற வாழ்க்கைச்செலவு தொடர்பான அமைச்சரவை உப குழு கூட்டத்தின் போதே எரிபொருள்விலையை அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது என அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் எரிபொருள் விலை உயர்வை எவராவது சவாலுக்குட்படுத்துவார்களாயின், ஜனாதிபதி பொய்யுரைத்துள்ளார் என்று கூறவே அதன்மூலம் [illegible]கின்றனர் எனப் பொருள் [illegible]கின்றது. அவ்வாறானவர்களிடம் ஜனாதிபதி மீது நம்பிக்கையில்லையா, அவ்வாறு நம்பிக்கையில்லையெனில் எதற்காக ஜனாதிபதியின் கீழ் இருக்கின்றீர்கள் என அவர்களிடம் கேள்வி எழுப்புங்கள்.



என்னை வெளியேற்றுவார்களா இல்லையா என்பது தொடர்பில் தேடிப் பார்த்து, அதற்கேற்ற வகையில் எனது நடவடிக்கைகளை மாற்றிக்கொள்வதற்கு நான் தயாரில்லை. நாய்கள் குரைக்கட்டும். அதற்கு கல்லெறிய போனால் எனது பயணமே தடைப்படும். நான் முன்னோக்கி பயணிப்பேன் - என்றார். (ம-4,44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி ஆக்கிரமிப்புக்கள் தொடர்ந்தால் மண் மீட்புப் போராட்டங்கள் தொடரும்

## ரவிகரன் எச்சரிக்கை



**முல்லைத்தீவு, ஜூலை 13**

**முல்லைத்தீவு - முள்ளிவாய்க்கால் கிழக்கு கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட வட்டுவாகல் கிராமத்தில் 617 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகளை அங்கு நிலை கொண்டிருக்கும் கோத்தாபய கடற்படை முகாமுக்காக அபகரிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

அவ்வாறு தமிழ் மக்களின் காணிகளை கடற்படை அபகரித்தால், மக்களோடு இணைந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் இறங்குவோம் என வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு பிரதேச நில அளவைத் திணைக்களத்தின் அரச நில அளவையாளர் பா.நவஜீவன் மீண்டும் காணிகளை அளவீடுசெய்து கடற்படை முகாமுக்கென அபகரிக்க உள்ளதாக காணிகளுக்குரிய தமிழ் மக்களுக்கு கடிதம் ஒன்றின் மூலம் அறிவித்த நிலையிலேயே ரவிகரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட வட்டுவாகல் மற்றும் முள்ளிவாய்க்கால் கிழக்கு பகுதிகளிலுள்ள காணிகள், காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் அடிப்படையில் அரசு எடுத்துக்கொள்ள உள்ளது என வர்த்தமானி மூலம் அறிவிப்பொன்று வெளியாகியிருந்தது. அதனைத்தொடர்ந்து கோத்தாபய கடற்படை முகாம் அமைந்துள்ள குறித்த தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளை அளவீடு செய்து, அவற்றை கடற்படையினருக்கு வழங்குவதற்கு தீவிர முயற்சிகள் பல முறை இடம்பெற்றிருந்தன. எமது ஆர்ப்பாட்டத்தின் பலனாக அந்த அளவீட்டு முயற்சிகள் கைவிடப்பட்டிருந்தன. எனினும் தற்போது அவை அளவீடு செய்யப்படவுள்ளன. இந்த அறிவிப்பை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. அந்தக் காணிகளுக்குரிய மக்கள் தமது கா்ணிகளை அளவீடுசெய்து கடற்படைக்கு வழங்குவதை ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழ் மக்களின் காணிகளில் அத்துமீறி அமைக்கப்பட்டுள்ள கோத்தாபய கடற்படை முகாமால் மக்கள் பலரும் குடியிருக்கவே காணிகளின்றி அவதிப்படுகின்றனர். அத்தோடு பலருக்கு அங்கு வாழ்வாதாரப் பயிற்செய்கை நிலங்கள் காணப்படுகின்றன. இதனால் பலர் தமது வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர். கோத்தாபய கடற்படை முகாம், அங்குள்ள மீனவ மக்கள் பாரம்பரியமாகப் பயன்படுத்தி வந்த அரசிச்சல் எனப்படுகின்ற ஒரு பிரதான வீதியையும் ஆக்கிரமித்துள்ளது. அத்தோடு நந்திக்கடலின் வடக்காறு பகுதியில் மீனவர்கள் மீன்பிடிச் செயற்பாட்டில் ஈடுபடமுடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. எனவேதான் இந்த கடற்படை முகாமை அங்கிருந்து அகற்றவேண்டும் என நாம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம். மக்களின் காணிகளை அளவீடுசெய்து சட்டரீதியாக ஆக்கிரமிப்புச்செய்யும் முயற்சி களை உரியவர்கள் கைவிடவேண்டும். அங்கிருந்து அந்த கடற்படை முகாம் அகற்றப்படவேண்டும். இவற்றுக்கு மாறாக காணி ஆக்கிரமிப்பு முயற்சிகள் தொடர்ந்தால், எமது மண் மீட்புப் போராட்டங்களும் தொடரும் - என்றார். (ப-246)

# முள்ளிவாய்க்காலில் காணிகளை அபகரிக்க அரசு மீண்டும் முயற்சி

## ஜூலை 29ஆம் திகதி காணி அளவீடு

முல்லைத்தீவு, ஜூலை 13

முள்ளிவாய்க்காலில் உள்ள தமிழ் மக்களின் காணிகள் கோத்தாபய கடற்படை முகாம் அமைப்பதற்காக மீண்டும் அளவிடப்படவுள்ளன என்று நில அளவைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் திணைக்களத்தால், காணிகளின் உரிமையாளர்களுக்கு அனுப்பவைக்கப்பட்ட கடிதத்தில் உள்ளதாவது:

கடந்த 2021ஆம் ஆண்டு மே 12ஆம் திகதியன்று முல்லைத்தீவு மாவட்டச் செயலர் மற்றும் கரைதுரைப்பற்று பிரதேச செயலாளர்களுடனான கலந்துரையாடலின் அடிப்படையில், நிறுத்திவைக்கப்பட்டிருந்த நில அளவையானது காணி எடுத்தல் சட்டம் (அத்தியாயம் 450) 05 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி மற்றும் நாடாளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் கட்டளை நிமித்தம், நில அளவை நாயகத்தால் அளிக்கப்பட்ட கட்டளையின் பிரகாரம் முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முள்ளிவாய்க்கால் கிழக்கு கிராம அலுவலர் பிரிவின் முள்ளிவாய்க்கால் கிராமத்தில் அமைந்துள்ள காணியை பிரதான கடற்படை முகாம் அமைப்பதற்காக சுவீகரிக்கும் பொருட்டு நில அளவை செய்வதற்காக ஜூலை 29ஆம் திகதி காலை 9 மணிக்கு வருகை தந்து தங்கள் காணிகளின் எல்லைகளையும் விவரங்களையும் இனங்காட்டும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். மேலும் தங்களது காணியை உறுதிப்படுத்தும் ஆவணத்தையும் ஆவணத்தின் பிரதி ஒன்றையும் எடுத்துவரும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள் என்றுள்ளது. (ப- 246)



## வவுனியா மாவட்டத்தில்

# நேற்றுக் காலை தொடக்கம் காற்றுடன் கூடிய காலநிலை

வவுனியா, ஜூலை 13

வவுனியாவில் நேற்றுக் காலை தொடக்கம் கடும் காற்றுடன் கூடிய காலநிலை காணப்படுகிறது.

கடந்த சில நாள்களாக வவுனியா மாவட்டத்தில் கடும் வெப்பம் நீடித்து வந்த நிலையில் நேற்றுக் காலையில் இருந்து கடும் காற்று வீசி வருகின்றது. கடும் காற்று காரணமாக சில பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. (ஐ-18)

# காட்டில் இருந்து மீண்டான் காணாமல் போன சிறுவன்

முல்லைத்தீவு, ஜூலை 13

மாங்குளம் - துணுக்காய் வீதியில் உதய சூரியன் நகர் பகுதியில் 14 வயதுச் சிறுவன் காணாமல் போயிருந்த நிலையில் இரு நாள்களின் பின்னர் காட்டில் இருந்து மீண்டுள்ளான்.

மாங்குளம் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் விஜயகுமார் விதுசன் என்ற மாணவன் கடந்த சனிக்கிழமை இரவு குளிக்கச் சென்றபோது காணாமல் போயிருந்தான்.

சிறுவன் அணிந்திருந்த உடைகள் கிணற்றடியில் காணப்பட்டன. குளிப்பதற்காக சிறுவன் எடுத்துச்சென்ற சவர்க்காரம் மாங்குளம்- துணுக்காய் வீதியில் அவரின் வீட்டுக்கு அருகில் உள்ள பஸ் தரிப்பிடத்தில் காணப்பட்டது. இது தொடர்பில் பெற்றோர் மாங்குளம் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்திருந்தனர். பொலிஸார் மற்றும் உறவினர்களால் சிறுவன் தேடப்பட்டுவந்தான். இந்த நிலையிலேயே சிறுவன் நேற்று காட்டில் இருந்து வீடு திரும்பியுள்ளான்.

இது குறித்து மாணவன் தெரிவிக்கையில் நான் குளிக்கச் சென்றவேளை யாரோ என்னைக் கூப்பிட்டது போல் இருந்தது. நான் காட்டுக்குள் சென்றேன். என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. இன்று காட்டுப் பகுதியால் வெளியேறினேன். வெவ்வேறு காட்டுக்குள் சென்றேன் என்றும் எனக்குத் தெரியாது - என்றான். (ப-246,19)

# கட்டுத்துவக்கு வெடித்து குடும்பஸ்தர் படுகாயம்

கிளிநொச்சி, ஜூலை 13

மிருக வேட்டைக்காக வைக்கப்பட்டிருந்த கட்டுத்துவக்கு தவறுதலாக வெடித்ததில் இரு பிள்ளைகளின் தந்தை ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புளியம் பொக்கணை பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த வேலாயுதபிள்ளை கிருஷ்ணகுமார் (வயது - 35) என்ற குடும்பஸ்தரே படுகாயமடைந்தார். காயமடைந்தவரை உடனடியாக தருமபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை தருமபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-113)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜனநாயக உரிமை மறுப்புக்கு எதிராக ஓரணியில் திரள்வோம்


*புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சி அறைகூவல்*

**யாழ்ப்பாணம், ஜூலை 13**

**கடந்த சில நாள்களாக உரத் தட்டுபாட்டுக்கு எதிராகவும், விலைவாசி உயர்வுக்கு எதிராகவும், சுகாதாரத் துறையினர் எதிர்நோக்கும் இடர்பாடுகளை தீர்க்கக் கோரியும், கல்வித்துறையை தனியார் மயமாக்கும் செயற்பாட்டுக்கும் அதற்கும் மேலாக இராணுவமயமாக்கும் முயற்சிகளுக்கு எதிராகவும் இடம்பெற்ற போராட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் அடாவடித்தனங்களையும் அத்துமீறிய கைதுகளையும் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சி வன்மையாகக் கண்டித்துள்ளது.**

இது தொடர்பில் அந்தக் கட்சி அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் உள்ளதாவது:

இங்கு தனிமைப்படுத்தல் சட்டம் அடக்குமுறை சட்டமாக மாற்றப்பட்டிருக்கிறது. அது மாத்திரமல்லாது நீதிமன்ற மும் அரசமைப்புச் சட்டமும் மிக மோசமாக மீறப்பட்டுள்ளது. அதே நேரம் 14 நாள்கள் தனிமைப்படுத்தல் என்பது நீதிமன்றத்தையும் மீறி ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்படும் விளக்கமறி யல் தடுப்புக் காவலாகவே அமைந்துள்ளது. அதேவேளையில் கொரோனா திரைமறைவில் நிறைவேற்று அதிகாரத்தையும் பெரும்பான்மைப் பலத்தையும் பயன்படுத்தி நாட்டின் வளங்களை, சொத்துக்களைக் கொள்ளையடிக்கவும் வெளிநாடுகளுக்கும் பெரும் பல்தேசிய நிறுவனங்களுக்கும் தாரைவார்ப்பதற்குமான சட்டங்களை ஆக்கிக்கொள்ள அரசு முனைப்புக்காட்டி வருகின்றது. அத்தோடு நாட்டின் அனைத்துத் துறைகளிலும் தனியார் மயமாக்கமும் இராணுவ மயப்படுத்தலும் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த சூழ்நிலையிலேயே மக்கள் தமது அடிப்படை உரிமைகளுக்காகவும் வாழ்வாதாரத்துக்காகவும் வீதியில் இறங்கி போராடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். ஆனால் அரசு மக்களின் கோரிக்கைகளுக்கு நியாயத்தையும் நீதியையும் பெற்றுக்கொடுப்பதற்குப் பதிலாக, தமது அதிகாரப் பலத்தைக் கொண்டு குறைந்தபட்ச ஜனநாயகத்தையும் குழிதோண்டிப் புதைக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. அந்த அடிப்படையிலேயே அண்மைய போராட்டங்கள் மீதான பொலிஸ் அடாவடித்தனங்களும் கைதுகளும் தடுத்துவைப்புகளும் மிகத்திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தச் சூழ்நிலையில் மக்கள் வெறும் வேடிக்கை பார்ப்பவர்களாக இருக்க முடியாது. அதேவேளை வழமை போல தலைகளை மாற்றுவதோ கட்சிகளை மாற்றுவதோ தீர்வாக அமையப் போவதுமில்லை. எனவே உழைக்கும் மக்களின் அதிகாரத்தை வென்றெடுப்பதற்கான மக்கள் சார்பான மாற்று அரசியல் பாதையை வலுப்படுத்த முன்வரவேண்டும். அத்தோடு குறைந்தபட்ச அடிப்படை ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்க இன மத மொழி பேதம் கடந்து அனைத்து உழைக்கும் மக்களும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களும் ஒன்றிணைந்து போராட முன்வர வேண்டும்- என்றுள்ளது. (ப)



# இலவச கண் சத்திர சிகிச்சை

வவுனியா,ஜூலை 13

இலவச கண் சத்திரசிகிச்சை வவுனியா மன்னார் வீதியில் அமைந்துள்ள ஆனந்தி கண் மருத்துவமனையில் நடைபெற்றது.

"புனர்வாழ்வும் புதுவாழ்வும்" அமைப்பின் தலைவர் வேலாயுதம் சர்வேஸ்வரனின் ஏற்பாட்டில், முல்லைத்தீவு மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட ஐந்து நோயாளிகளுக்கு இலவசமாக கண் அறுவைச்சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. சிகிச்சையை கண் அறுவைச்சிகிச்சை நிபுணர் மருத்துவர் கிரிதரன் மேற்கொண்டிருந்தார். இது தொடர்பில் கருத்து தெரிவித்த, புனர்வாழ்வும் புதுவாழ்வும் அமைப்பின் தலைவர் வேலாயுதம் சர்வேஸ்வரன்.

"வவுனியா மாவட்டம் மற்றும் அதனை சூழவுள்ள மாவட்டங்களிலுள்ள ஏழை மக்களுக்கு இன மத பேதமின்றி இலவச கண் சத்திரசிகிச்சையை மேற்கொள்ளவுள்ளோம்.

குறைந்தது 2 ஆயிரம் நோயாளிகளுக்கு சத்திர சிகிச்சையை இலவசமாக மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளோம். இலவச கண் சத்திர சிகிச்சைக்கான நிதியுதவியை இங்கிலாந்தின் சொலிகல் மாகாணத்தை சேர்ந்த பாடசாலை சமூகம் 52 கிலோமீற்றர் நடைபவனியாக சென்று பணம் சேகரித்து வழங்கியுள்ளனர். என்றார். (ஐ-110)

# "கப்ருக" வேலைத்திட்டம் மன்னாரிலும் ஆரம்பம்

மன்னார்,ஜூலை 13

மன்னார் மாவட்டத்துக்கான 'தொரின் தொரட்ட கப்ருக' வீட்டுக்கு வீடு தென்னை மரம் எனும் தேசிய நிகழ்ச்சித் திட்ட ஆரம்ப நிகழ்வு கடந்த சனிக்கிழமை முசலி பிரதேசத்தில் நடைபெற்றது.

பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 113 பயனாளிகளுக்கு 500 தென்னங்கன்றுகள் பகிர்ந்தளிக்கும் திட்டத்தின் முதற் கட்டமாக 25 பயனாளிகளுக்கு தலா 5 தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரும் மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான்,

முசலி பிரதேச செயலர் ரஜீவ், மன்னார் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் மகேஸ்வரன், மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் ஜனாப் அலியார், விவசாய பணிப்பாளர் திருமதி.சகீலா பானு, தெங்கு அபிவிருத்திப் பிராந்திய முகாமையாளர் உதயச்சந்திரன் மற்றும் பயனாளிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ஐ-60)



# செல்வபுரத்தில் வீடு புகுந்து 320,000 ரூபா பணம் திருட்டு

முல்லைத்தீவு, ஜூலை 13

முல்லை. செல்வபுரம் பகுதியில் வீட்டில் எவரும் இல்லாத சந்தர்ப்பத்தில் வீட்டுக்குள் நுழைந்த நபர்கள் வீட்டில் இருந்த மூன்று லட்சத்து 20 ஆயிரம் ரூபா பணத்தைத் திருடிச் சென்றுள்ளனர் என்று முல்லைத்தீவு பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. வீட்டின் உரிமையாளர்கள் செல்வபுரம் பகுதியில் உள்ள மாதா கோவில் ஒன்றுக்கு அதிகாலை வேளை பூசைக்காகச் சென்றபோது இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது குறித்து முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். (ப-19)



# யாழ்ப்பாண நகரப் பகுதியில் கொரோனா விழிப்புணர்வு

யாழ்ப்பாணம்.ஜூலை 13

யாழ்ப்பாண நகரப் பகுதியில் கொரோனா விழிப்புணர்வு செயற்பாடு ஒன்று நேற்று திங்கட்கிழமை யாழ்.மாவட்ட சர்வமதப் பேரவையால் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கவனம், அபாயம் மற்றும் அவதானம் எனும் தொனிப்பொருளில் கொரோனா விழிப்புணர்வு பதாகைகள் யாழ்ப்பாண நகரப்பகுதியெங்கும் காட்சிப்படுத்தப்பட்டன.

நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் உள்ளிட்ட மதத் தலைவர்கள் கலந்துகொண்டனர். (ஐ-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிமைப்படுத்தல் சட்டத்தில் பல்வேறு துஷ்பிரயோகங்கள்!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

**கொழும்பு, ஜூலை 13**
**கொரோனாப் பெருந்தொற்றைத் தடுப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட தனிமைப்படுத்தல் சட்டத்தில் அரசு பல்வேறு முறைகேடுகளைச் செய்கின்றது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.**

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினதும் அதன் ஊடகக் குழுவினதும் உறுப்பினரான வா.ரட்ண சிங்கம் இது தொடர்பில் நேற்று மேலும் தெரிவிக்கையில்,

தற்காலத்தில் அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் சட்டம் மிகவும் பாரதூரமான வகையில் மீறப்படுகின்றது. தனிமைப்படுத்தல் சட்டங்களை உலகில் உள்ள பல நாடுகளும் நடைமுறைப்படுத்தின. கொரோனாவைக் கட்டுப்படுத்தும் நோக்கில்தான் இந்தச் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. ஆனால் இலங்கையில் அரசுக்கு எதிரான தொழிற்சங்க நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த இந்தத் தனிமைப்படுத்தல் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

கொத்தலாவல பல்கலைக்கழகத்தின் ஊடாக கல்வியை இராணுவ மயமாக்குகின்றனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருப்பதை ஏற்க முடியாது.

அதிலும் அரசுக்கு ஆதரவான நடவடிக்கைகளுக்கு தனிமைப்படுத்தல் சட்டத்தை நடைமுறைப்படுத்தாமல் அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் மட்டும் இந்தச் சட்டங்களை பயன்படுத்துவதால் தனிமைப்படுத்தல் சட்டங்களின் உண்மைத்தன்மையில் மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர் - என்றார். (ம)

# எதிர்க்கட்சியுடன் சு.க. இணையாது

## மஹிந்த அமரவீர தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 13
பிரச்சினைகள் இருப்பினும், அரசிலிருந்து விலகி எதிர்க்கட்சியுடன் இணைந்துகொள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சி தயாராக இல்லை என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கூட்டணிக்குள் ஏற்பட்டுள்ள சிக்கல்களுக்கு மத்தியில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்களுக்கு நேரடியாக தீர்மானம் எடுக்க முடியாமல் உள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவத்துவல அண்மையில் தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளித்துள்ள அமரவீர, சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் முகங்கொடுக்கும் சிக்கல்கள் தொடர்பில் சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைவர்களுடன் கலந்துரையாடி தீர்மானத்துக்கு வருவோம் - என்றார். (ம-4)

# அரசமைப்புக்கு முரணாகவே மஹிந்தவின் அமைச்சரவை!

## சோபித தேரர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 13
அரசமைப்புக்கு முரணாகவே பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையிலான அமைச்சரவை அமைக்கப்பட்டுள்ளது என்று ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தின் விதிகளின்படி அமைச்சரவை மீண்டும் பதவியேற்க வேண்டியிருந்தாலும், இதுபோன்ற பதவியேற்புகள் இதுவரை நடைபெறவில்லை. அரசமைப்பின் 53ஆவது பிரிவின்படி, திருத்தப்பட்ட உட்பிரிவுகள் தொடர்பாக அமைச்சரவை மீண்டும் உறுதிமொழி எடுக்க வேண்டியது கட்டாயமாகும். தற்போதைய நீதி அமைச்சர் ஒரு சட்ட நிபுணராகக் கருதப்படுகிறார். இது அவருக்குத் தெரியாதா? அவரும் அவரது அமைச்சரவையும் அரசமைப்புக்கு மாறாகச் செயற்படுவதை அவர் அறிந்திருக்கமாட்டார். அப்படியானால், அரசையும், நாட்டையும் நெருக்கடியில் ஆழ்த்தும் சதித்திட்டத்தில் அவர் ஈடுபட்டாரா என்பது சந்தேகமே.

நாட்டின் உயிர்வாழ்வை உறுதிப்படுத்த அரசு நிலையானதாக இருக்க வேண்டும். சட்டவிரோத அமைச்சரவை எடுக்கும் முடிவுகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தங்களின் நிலை குறித்து சிந்திக்க வேண்டும் - என்றார். (ம-4)

# எதிரணியின் திட்டங்கள் அனைத்தும் புஸ்வாணம்

## அரசை ஒருபோதும் வீழ்த்த முடியாது என்று தம்பட்டம்

கொழும்பு, ஜூலை 13
இந்த அரசு மீது நம்பிக்கையிருப்பதாலேயே மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆதரவை நாட்டு மக்கள் வழங்கினர். எனவே, எதிரணியினர் எத்தகைய திட்டங்களை வகுத்தாலும் அரசை கவிழ்க்க முடியாது என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினரான இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா நெருக்கடி நிலை தொடர்பில் சில விமர்சனங்கள் உள்ளன. ஆளுந்தரப்பிலுள்ள ஒரு சிலர் மீது தனிப்பட்ட ரீதியில் மக்களுக்கு அதிருப்தி உள்ளது. எனினும், இந்த அரசு மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கை குறையவே இல்லை.

பெரும் நம்பிக்கையிருப்பதாலேயே மக்கள் ஒன்றுபட்டு எமது அரசுக்கு பெரும் பலத்தை அன்று வழங்கினர். மக்கள் வழங்கிய ஆணையை நாம் பாதுகாப்போம். எனவே, எப்படித் தான் துள்ளினாலும் எதிரணியால் அரசை ஒருபோதும் வீழ்த்த முடியாது - என்றார்.

அதேவேளை, போராட்டத்தில் ஈடுபட்டவர்களை பொலிஸார் கைது செய்த விதம் தொடர்பில் மற்றுமொரு இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது தவறு என்பது போலவே போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைதுசெய்யப்பட்ட விதமும் தவறு. அத்தகைய அணுகுமுறையை அனுமதிக்க முடியாது. இது சரிசெய்யப்படவேண்டும் - என்றார். (ம-4,44)

# பஸில் வசமிருந்தமை மஹிந்தவுக்கு மாற்றம்

கொழும்பு, ஜூலை 13
நிதியமைச்சராக நியமிக்கப்பட்ட பஸில் ராஜபக்சவுக்கு கீழிருந்த நிறுவனங்கள் சில, பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் கீழிருக்கும் பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்டங்களைச் செயற்படுத்துதல் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. அதற்கான சிறப்பு வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

நிதியமைச்சராக பஸில் ராஜபக்சவும், பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்டங்களைச் செயற்படுத்துதல் அமைச்சராக பிரதமர் மஹிந்த ராஜபக்சவும் கடந்த 8ஆம் திகதி நியமிக்கப்பட்டனர். (ம-4)

# அனைத்திலும் அரசு பெயில்!

## ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 13
அனைத்து வழிகளிலும் தோல்வி கண்டுள்ள அரசு, தற்போது அடக்குமுறை எனும் ஆயுதத்தைக் கையிலேந்தி சட்டத்துக்கு புறம்பாகப் பயணிக்க முற்படுகின்றது. இதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டு பலவந்தமாக தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த அரசு பெயில் என ஆரம்பத்திலேயே சுட்டிக்காட்டினோம். தற்போது எல்லாவழிகளிலும் பெயில் என்பது உறுதியாகியுள்ளது. அதனால் தான் அடக்குமுறை வழி கையாளப்படுகின்றது. அதுமட்டுமல்ல சட்டத்தையும் கையில் எடுத்து செயற்படுகின்றது. இதன் ஓர் அங்கமாகவே போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைதுசெய்யப்பட்டு, பலவந்தமாக தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் - என்றார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ஜே.வி.பி. உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தி,

மக்களை ஒடுக்குவதற்கே இந்த அரசு முற்படுகின்றது. அதனால் தான் மக்கள் பிரதிநிதிகள் மீது கைவைக்கின்றது. இந்த நாட்டிலுள்ள பெரும்பாலான மக்கள் இந்த அரசுக்கு வாக்களித்தனர். சுதந்திரத்தை எதிர் பார்த்தனர். உரிமைகள் கிடைக்கும் என நம்பினர். ஆனால் என்ன நடக்கின்றது? மக்கள் ஒடுக்கப்படுகின்றனர். எனவே, விரைவில் மக்கள் உரிய பதிலை வழங்குவார்கள். நாமும் அமைதி காக்கப் போவதில்லை - என்றார்.



(ம-4,44)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுகாதாரப் பணிப்பாளர் பதவிதுறக்க வேண்டும்

## மக்கள் உரிமையை பாதுகாக்கும் இயக்கம் வலியுறுத்து

**கொழும்பு, ஜுலை 13**

**சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு அசேல குணவர்தன பொருத்தமற்றவர். எனவே அவர் அந்தப் பதவியில் இருந்து உடன் விலக வேண்டும் என்று மக்கள் உரிமையைப் பாதுகாக்கும் இயக்கம் வலியுறுத்தியுள்ளது.**

போராட்டத்தில் ஈடுபட்ட தொழிற்சங்கப் பிரமுகர்கள் கைதுசெய்யப்பட்டமைக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் மாநாட்டில், அமைப்பின் உறுப்பினர் பத்ம தேரர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சட்டத்தையும், ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டிய பொலிஸார், கூலிப்படை போல் செயற்படுகின்றனர்.

நாட்டு மக்களை பயங்கரவாதிகளாகக்கருதி அவர்களை ஒடுக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த நிலைமை நீடித்தால் சர்வதேச மட்டத்தில் எமது நாடு அபகீர்த்திக்குள்ளாகும். இந்த நிலைமைக்கு வழிசமைத்து கொடுப்பது யார்?

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் எவரது தேவையைப் பூர்த்தி செய்கின்றார்? அந்தப் பதவிக்கு அவர் பொருத்தமற்றவர். எனவே அவரை கௌரவமாகப் பதவி விலகுமாறு வலியுறுத்துகின்றோம்- என்றார். (ம-4,44)



# அரசின் மோசமான பக்கம் தற்போது வெளிப்படுகிறது

## முன்னாள் சபாநாயகர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜுலை 13

அரசின் தற்போதைய செயற்பாடுகளால், அவர்களின் மிகவும் மோசமான மறுபக்கம் தற்போது ஆதாரபூர்வமாக வெளிப்பட்டு வருகின்றது. தமது தவறுகளைத் திருத்திக்கொள்வதற்குப் பதிலாக, மக்களை அடக்கவே நேரத்தைச் செலவிடுகின்றது.

இவ்வாறு முன்னாள் சபாநாயகரும் சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவருமான கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்பாடு தொடர்பில் விதிக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாடுகளை அரசு மிகவும் மோசமான வகையில் மீறுகின்றது. ஏகாதிபத்தியம் மேலோங்கும் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும், அதனை மக்கள் தோற்கடித்திருக்கின்றார்கள் என்பதே வரலாறு எமக்குச் சொல்லும் பாடமாகும்.

பௌத்த மதத்தைப் பாதுகாப்போம் என்று கூறியவர்கள், பௌத்த பிக்குகளை நிலத்திலிருந்து இழுத்துச் செல்வார்கள் என்று யாரும் நினைக்கவில்லை. வயது முதிர்ந்தவர்களும் தொழிற்சங்கத் தலைவர்களும் மிகவும் மோசமான விதத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதிலிருந்து அவர்களது மோசமான பக்கம் வெளிப்பட்டுள்ளது- என்றார். (4)

# மக்களின் சுதந்திரத்தை ஒடுக்குவதை ஏற்கோம்!

## மருத்துவர்களும் எதிர்ப்பு

கொழும்பு, ஜுலை 13

தனிமைப்படுத்தல் சட்டங்களைப் பயன்படுத்தி ஆர்ப்பாட்டக்காரர்களை பொலிஸார் ஒடுக்கியமையை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் மத்தியகுழு உறுப்பினர் மருத்துவர் பிரசாத் கொலம்பகே தெரிவிக்கையில்,

தனிமைப்படுத்தல் சட்டங்களை நடைமுறைப்படுத்துவது குறித்து எங்களுக்கு எந்த மாற்றுக்கருத்தும் இல்லை. ஆனால் உரிய நோக்கங்களுக்கு மாறாக மக்களின் சுதந்திரத்தை ஒடுக்குவதை நாங்கள் எதிர்க்கின்றோம். ஏனையவர்களைப் போன்று தங்களின் கோரிக்கைகளை முன்வைப்பதற்கான உரிமை தொழிற்சங்கங்களுக்கு உள்ளது. பொலிஸார் இந்த விடயத்தில் இரட்டை வேடமிடுகின்றனர்.

இதே சந்தர்ப்பத்தில் சிலர் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர் ஆனால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படாதது ஏன்?- என்றார். (ம-4)



### தனிமைப்படுத்தப்பட்ட

# ஆசிரியர் சங்கத்தினருக்கு மாற்று உடைகள் கையளிப்பு

முல்லைத்தீவு, ஜுலை 13

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு தனிமைப்படுத்தலில் உள்ள ஆசிரியர் சங்கத் தலைவர் உள்ளிட்ட 19 பேருக்கு மாற்று உடைகள் வழங்கப்பட்டன.

ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்ட வரைபுக்கு எதிராக இலங்கை ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்தோர் அண்மையில் கொழும்பில் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.


இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 19 பேர் கைதுசெய்யப்பட்டு கேப்பாப்பிலவு விமானப் படை முகாமில் தனிமைப்படுத்தப்பட்டனர்.

இவர்களுக்கான மாற்று உடைகளை அரசியல் ஆய்வாளரும் சட்டத்தரணியுமான சி.அ.ஜோதிலிங்கம், யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் மற்றும் வலிகிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராசா நிரோஷ் ஆகியோர் நேரில் சென்று வழங்கினர். (ஐ-26)



# பருப்பு, சீனி விலை குறைப்பு

கொழும்பு, ஜுலை 13



மைசூர் பருப்பு மற்றும் சீனி ஆகியவற்றின் விலையைக் குறைக்க தீர்மானித்துள்ளோம் என்று நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

சதொச மற்றும் கூட்டுறவு விற்பனை நிலையங்கள் ஊடாக குறைந்த விலையில் பருப்பு மற்றும் சீனியைக் கொள்வனவு செய்யமுடியும். அதனடிப்படையில் ஒரு கிலோக்கிராம் பருப்பு 175 ரூபாவுக்கும், ஒரு கிலோக்கிராம் சீனி 110 ரூபாவுக்கும் விற்பனைசெய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4)

# கிராம அலுவலர்கள் மீண்டும் போராட்டம்?

கொழும்பு, ஜுலை 13

கொவிட் அபாயக் கொடுப்பனவு உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து, அனைத்து கிராம அலுவலர்களும் இந்த வாரத்தில் கடமைகளைப் புறக்கணிக்கத் தயாராகி வருகின்றனர்.

கிராம அலுவலர்களுக்கு தடுப்பூசி போடாதது உட்பட பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்கத் தவறியதால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று சங்கத்தின் தலைவர் டபிள்யூ. ஜீ.கமல் கித்சிறி தெரிவித்துள்ளார்.

நாட்டில் 12 ஆயிரம் கிராம அலுவலர்கள் கடமையில் உள்ளனர். கொவிட் தடுப்பூசி ஆயிரத்து 500 பேருக்கு மட்டுமே செலுத்தப்பட்டுள்ளது. அதிலும் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவில்லை. அவர்கள் வசிக்கும் பகுதிகளில் தடுப்பூசி ஏற்றும் திட்டங்களில் பங்கேற்றதன் மூலம் அவர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோதனை திகதியில் ஏனிந்த சோதனை?

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த. உயர்தரப் பரீட்சைத் திகதி தொடர்பில் நாளொரு திகதியும் பொழுதொரு அட்டவணையுமாக ஒன்றுக்கொன்று மாறுபட்ட தகவல்களே வெளிவந்த வண்ணமிருக்கின்றன.

திட்டமிட்ட திகதிகளில் பரீட்சைகள் நடைபெறும் என்று ஒருநாள் அறிவிக்கப்பட மறுநாள் பரீட்சைத் திகதிகள் தொடர்பில் மறுபரிசீலனை நடக்கின்றது என்று கூறப்படுகின்றது. கல்வி அமைச்சில் உள்ளவர்களே ஊடக சந்திப்புக்களில் இந்தத் தகவல்களை வெளிப்படுத்துகின்றனர்.

இப்போதுள்ள கொரோனா தொற்று நிலைமையில் பாடசாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. மாணவர்கள் வீடுகளில் இருந்தவாறு இணையத் தொழில் நுட்பத்தின் மூலம் தங்களால் இயன்ற அளவு கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டிருகின்றனர். அசாதாரண கற்றல் சூழ்நிலையில் கற்றுக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கு, அரசின் இந்தத் தடுமாற்றம் நிச்சயம் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. மிகச் சிரமமான சூழ்நிலைகளில் கற்றல் செயற்பாடுகளை மேற்கொண்டுவரும் மாணவர்களுக்கு, பரீட்சைகள் தொடர்பாக தினமும் வெளியாகும் தகவல்கள் தளர்வை ஏற்படுத்தும்.

தற்போதைய அரசு, கொவிட் தொற்று நிலைமைகளில் நிர்வாக ரீதியான தடுமாற்றங்களை வெளிக்காட்டியிருந்தது. மணிக்கொரு தரம் முடிவுகளை மாற்றி அறிவிப்புக்களை வெளியிட்டு மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தியிருந்தது. அந்தப் போக்கு கல்வி விடயத்திலும் நீடிப்பது வருத்தத்துக்குரியது.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை சிறார்களுக்குப் பெருஞ்சுமை என்று ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டுவரும் நிலையில், அரசு தினம் ஒரு தகவலை வெளியிடுகின்றமை அவர்களுக்கு மேலும் சுமையாகவே மாறும். அதைப் போன்று உயர்தரப் பரீட்சை மாணவர்களுக்கும் தினம் தினம் வரும் அறிவிப்புக்கள் பெரும் அழுத்தத்தையும், மனக் கிலேசத்தையும் ஏற்படுத்தும்.

கொரோனா தொற்று நிலைமையால் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டு ஏற்கனவே அழுத்தத்தில் இருக்கும் மாணவர்களை, அரசும் தினமொரு அறிவித்தலை விடுத்து குழப்பமடையச் செய்வது ஏற்புடையது அல்ல. தீர்மானம் மிக்க முடிவொன்றை எடுத்து பின்னர் மக்களுக்கு அறிவிப்பதே பொருத்தமானது. மாணவர்களின் பரீட்சைத் தயார்ப்படுத்தலுக்கு இது மிக முக்கியமானது.

நாட்டின் கொவிட் தொற்று நிலைமையால் பரீட்சைகளை அறிவித்த திகதிகளில் நடத்த முடியாது இருப்பின் அது தொடர்பாகத் தீர்க்கமான முடிவொன்றை அரசு எடுக்க வேண்டும். அதைவிடுத்துத் தினம் ஒரு அறிவிப்புக்களை விடுத்துக் கொண்டிருப்பது மாணவர்களின் கற்றலை வெகுவாகப் பாதிக்கும். பரீட்சைகள் விடயத்தில் கல்வி அமைச்சு திடமான முடிவை விரைவாக எடுத்துப் பகிரங்கப்படுத்த வேண்டும். சோதனை வைக்கும் திகதியில் கூட இத்தனை சோதனைகள் மாணவர்களுக்கு தேவை தானா?



# சமூக விரோதிகள் அட்டகாசம் மக்கள் இடம்பெயரும் அவலம்

## கெற்பேலியில் இந்த நிலை

**கொடிகாமம், ஜூலை 13**

**தென்மராட்சி கெற்பேலிப் பகுதியில் சட்ட விரோத, சமூக விரோத செயல்களில் ஈடுபடும் சில நபர்களால் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அங்கு வசிக்கும் ஏனைய மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

குறித்த நபர்களின் செயற்பாடுகளால் அச்சமடைந்த சில குடும்பங்கள் வேறு இடங்களுக்குச் சென்று வசிக்கின்றனர் என்றும், சமூக விரோதமாகச் செயற்படுவோரை நல்வழிப்படுத்த கெற்பேலியைச் சேர்ந்த புத்திஜீவிகள் முன்வர வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நீண்ட காலமாக கெற்பேலிப் பகுதியில் இடம்பெறும் மணல் கொள்ளை காரணமாக ஏற்படும் வாள் வெட்டுச் சம்பவங்கள், தாக்குதல் சம்பவங்கள், மதுபானத்தை அருந்திவிட்டு தேவையற்ற, அர்த்தமற்ற, வகையில் அத்துமீறி வீடுகளுக்குச் சென்று கண்மூடித்தனமாக வீட்டில் இருப்பவர்களைத் தாக்கி, அவர்களைத் துன்புறுத்தி உடைமைகளை அழித்து சேதப்படுத்துவதால் அப்பகுதியில் வசிக்கும் ஒரு சில குடும்பங்கள் வேறு இடங்களுக்குச் சென்று வசிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு சமூக விரோத செயல்களில் ஈடுபடுவோரை நல்வழிக்கு கொண்டுவருவது கேள்விக் குறியாக உள்ளது. எனவே கெற்பேலிப் பகுதியில் சமூக விரோத செயல்களில் ஈடுபடுவோரை அடையாளம் கண்டு நல்வழிப்படுத்த கெற்பேலிப் பகுதியில் வசிக்கும் புத்திஜீவிகள், கிராம அலுவலர், கிராம மட்ட அமைப்புக்கள் மற்றும் பொலிஸார் இணைந்து விழிப்புணர்வுகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ப-159)

## தென்மராட்சி பிரதேசத்தில்

# மேலும் ஒரு கர்ப்பிணிக்கு கொரோனாத் தொற்று

**சாவகச்சேரி, ஜூலை 13**

தென்மராட்சி பிரதேசத்தில் மேலும் ஒரு கர்ப்பிணிக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த கர்ப்பிணி வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு சென்றிருந்த வேளையில் காய்ச்சல் ஏற்படவே மந்திகை மருத்துவமனையில் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. பரிசோதனை அறிக்கையில் கர்ப்பிணிக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டது.

இதனையடுத்து தொற்றுக்குள்ளான பெண்ணுடன் நேரடித் தொடர்பைப் பேணியவர்கள் தனிமைப் படுத்தப்பட்டனர்.



ஏற்கனவே தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த ஐந்து கர்ப்பிணிகளுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவியை பறித்தாலும் எனக்குச் சந்தோஷமே

## வருத்தமடையவில்லை என்கிறார் கம்மன்பில



**கொழும்பு, ஜூலை 13**

**எனது அமைச்சுப்பதவியை மீள பெற்றுக்கொள்ளல் அல்லது மாற்றியமைப்பது தொடர்பில் நான் கவலையடைவில்லை. அதற்கான பூரண அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கின்றது என்று வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.**

ஹங்வெல்ல பிரதேசத்தில் ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதமரின் பரிந்துரைக்கமைய ஜனாதிபதிக்கு எந்தவொரு அமைச்சுப் பதவியையும் மீள பெறவும் முடியும். அதனை மாற்றியமைக்கவும் முடியும்.

அந்தவகையில் எனக்கு வழங்கப்பட்டிருக்கும் அமைச்சுப்பதவியை என்னிடமிருந்து பெற்று வேறு யாருக்காவது வழங்குவதற்கு தீர்மானித்தால் அதற்கு நான் தயார். ஏனெனில் நான் அமைச்சுப்பதவியுடன் அரசுக்கு வரவில்லை. அரசை நடத்துவதும் நான் அல்லன். மாறாக ஜனாதிபதியும் அமைச்சரவையுமாகும் என்றே இதுவரை நான் நினைத்துக் கொண்டிருக்கின்றேன்.

ஐக்கிய மக்கள் சக்தி எனக்கு எதிராக கொண்டு வந்திருக்கும் நம்பிக்கையில்லா பிரேரணைக்கு முகம்கொடுக்க நான் தயாராகவே இருக்கின்றேன். பிரேரணை வெற்றிபெறுமா இல்லையா என்பது 20ஆம் திகதி மாலை இடம்பெறும் வாக்களிப்பில் தெரியவரும். அதுவரை சற்றுப் பொறுமையாக இருங்கள் - என்றார். (ம-4)

# தென்மராட்சியில் வசிக்கும் முதியோருக்குத் தடுப்பூசி!



**சாவகச்சேரி, ஜூலை 13**

தென்மராட்சி பிரதேசத்தில் வாழும் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தால் பொது இடங்களில் வைத்து நேற்று தடுப்பூசி ஏற்றப்பட்டது.

இதுவரை தடுப்பூசியை பெற்றுக்கொள்ளாத முதியோரின் நலன் கருதி மீசாலை, வரணி மற்றும் தச்சன்தோப்பு ஆகிய இடங்களில் உள்ள பொதுமண்டபங்களில் இந்தத் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன.

ஒவ்வொரு நிலையத்திலும் சுகாதார மருத்துவ அதிகாரியின் மேற்பார்வையில் பலத்த பாதுகாப்பின் மத்தியில் தடுப்பூசி ஏற்றப்பட்டது.

நாவற்குளி பொதுசுகாதாரப் பரிசோதகர் பிரிவில் 121 பேருக்கும், வரணி பொதுச் சுகாதார பிரிவில் 120 பேருக்கும், மந்துவில் பொது சுகாதார பரிசோதகர் பிரிவில் சிலருக்கும் இந்தத் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன. (ஐ-9)



# கலாமன்றங்களுக்கு இசைக்கருவிகள்

மன்னார்,ஜூலை 13

மன்னார் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட கலாமன்றங்களுக்கு இசைக்கருவிகள் நேற்று வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு மன்னார் மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தலைமையில் நடைபெற்றது.

வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட மன்னார் நகரம், நானாட்டான் பிரதேசம், மாந்தை மேற்கு, மடு மற்றும் முசலி பிரதேசங்களில் உள்ள கலாமன்றங்களுக்கே இசைக்கருவிகள் வழங்கப்பட்டன. (ஐ-213)

# பிரேமலால் மீதான மனு செப்.7 விசாரணைக்கு!

கொழும்பு, ஜூலை 13

சாவுத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர உள்ளிட்ட பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள மேன்முறையீட்டு மனுவை, எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 7ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு நபர் ஒருவரைக் கொலை செய்த குற்றச்சாட்டில், பிரேமலால் ஜயசேகர உள்ளிட்ட மூவருக்கு இரத்தினபுரி மேல் நீதிமன்று சாவுத் தண்டனை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

# 300க்கு மேற்பட்ட ஆசிரியர்களுக்கு நேற்று தடுப்பூசி!

சாவகச்சேரி, ஜூலை 13

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் உள்ளிட்ட ஏனைய கல்வி வலய ஆசிரியர்கள் 300க்கு மேற்பட்டோர் நேற்று சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் தடுப்பூசியை பெற்றுக்கொண்டனர்.

இவர்களுடன் பிரதேசத்தில் உள்ள அரச திணைக்கள அலுவலகங்களின் முன்களப் பணியாளர்கள், 60 வயதுக்கு மேற்பட்டோர் என பெருமளவானோர் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டனர். (ஐ-9)

# ராஜபக்சக்கள் அனைவரும் மிக ஒற்றுமையானவர்கள்

## நவீன் புகழாரம்



கொழும்பு, ஜூலை 13

ராஜபக்சக்களின் ஒற்றுமையைப் பார்த்தாவது, எதிர்க்கட்சியினர் ஒன்றிணைய வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நவீன் திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்க்கட்சியினர் ஒன்றிணையாவிட்டால் ராஜபக்சக்களைத் தோற்கடிக்க முடியாது. பஸிலை நாடாளுமன்றுக்குள் எடுக்க மாட்டோம். பதவி வழங்கமாட்டோம் என்றனர். ஆனால் இறுதியில் மூவரும் சிரித்தவாறு, அமைச்சுப் பதவிகளை பகிர்ந்து கொண்டுள்ளனர். அதிகாரத்துக்கான பேராசைக்காக ராஜபக்சக்கள் எதையும் செய்வார்கள் என்றார். (ம-4)

# மேல் மாகாணத்தில் ரயில்கள், பஸ்களின் சேவை அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 13

மேல் மாகாணத்துக்கான ரயில் மற்றும் பஸ்களின் சேவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. அதற்கமைவாக ரயில் சேவைகளின் எண்ணிக்கை 103ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது என்று ரயில்வே திணைக்களத்தின் பிரதிப் பொது முகாமையாளர் காமினி செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

நாட்டில் நடைமுறையிலிருந்த பயணக்கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதையடுத்து, பயணிகளின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்துள்ளது. இதனால் ரயில் மற்றும் பஸ்களின் சேவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

புதிய ரயில் சேவை கால அட்டவணையின் படி மீரிகம, வெயாங்கொட, கம்பஹா, மற்றும் ராகம ஆகிய பாதைகளின் ஊடாக 33 ரயில் சேவைகளும், கரையோர ரயில் சேவைகளான அளுத்கம, களுத்துறை, மொரட்டுவ, பாணந்துறை மற்றும் கல்கிஸ்ஸ ஆகிய பிரதேசங்கள் ஊடாக 42 சேவைகளும், களனிவெளி ரயில் பாதை ஊடாக அவிசாவளை, கொஸ்கம மற்றும் பாதுக்க ஆகிய பிரதேசங்களை ஊடறுத்து 13 ரயில் சேவைகளும் இடம்பெறவுள்ளன.

இதேவேளை அத்தியாவசிய சேவைகளுக்காக மாத்திரம் வருவோரின் வசதி கருதி மாகாணங்களுக்கூடாக வரையறுக்கப்பட்ட பஸ்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்படும் என்று இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

மேல் மாகாணத்தில் அத்தியாவசிய சேவைக்காக 11 ஆயிரத்து 438 தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று மேல் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் பிரசன்ன சஞ்ஜீவ தெரிவித்துள்ளார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையத்தில் சிறுமி விற்பனை பிரபலங்கள் பலருக்கு தொடர்பு

## இதுவரை 40 பேர் கைது



**கொழும்பு, ஜூலை 13**
**15 வயதான சிறுமியை, இணையத்தளம் ஊடாக விளம்பரப்படுத்தி, பாலியல் நடவடிக்கைகளுக்காக விற்பனை செய்த சம்பவத்துடன், மருத்துவர் உள்ளிட்ட பலர் தொடர்புபட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.**


இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை 40 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
பொலிஸ் விளையாட்டு பிரிவைச் சேர்ந்த உப பொலிஸ் பரிசோதகரும், இரத்மலானைப் பகுதியைச் சேர்ந்த முன்னாள் வங்கி முகாமையாளரும் இறுதியாக கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
கடந்த ஜூன் 7ஆம் திகதி கல்கிஸை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்குக் கிடைத்த தகவலை அடுத்து, சம்பவம் தொடர்பான விசாரணைகள் பொலிஸ்மா அதிபர் சந்தன விக்ரமரத்னவின் உத்தரவில் பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்திடம் கையளிக்கப்பட்டது. அதனடிப்படையில் சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
பாதிக்கப்பட்ட சிறுமி தொடர்ந்தும் வட கொழும்பு போதனா மருத்துவமனையில் மருத்துவர்களின் கண்காணிப்பில் உடலியல் மற்றும் இதர சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (4)

# பெற்ற மகனுக்கே எமனான பெற்றோர்

கொழும்பு, ஜூலை 13
தாம் பெற்ற மகனையே, பெற்றோர் அடித்துக் கொலைசெய்த பரிதாபச் சம்பவம் ஹசலகா என்ற இடத்தில் பதிவாகியுள்ளது.
இந்தச் சம்பவம் தொடர்பில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் கைதுசெய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். சம்பவத்தில் உயிரிழந்தவர் ஹசலகாவில் வசிக்கும் 27 வயதான சுனில் நிசங்கா.
திருமணமான அவர், தனது குடும்பத்தினருடன் பெற்றோரின் வீட்டின் பின்புறம் உள்ள ஒரு சிறிய அறையில் வசித்து வந்துள்ளார்.
குடும்பத் தகராறில், மாமனும், அவரது மைத்துனரும் தனது கணவரைத் தடிகளாலும், கைகளாலும் அடித்து தாக்கினர் என்று அவரது மனைவி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.
சம்பவம் தொடர்பில் இறந்தவரின் தாய், தந்தை, சகோதரி மற்றும் அவரது கணவர் ஆகியோரை ஹசலகா பொலிஸார் கைது செய்தனர்.
சந்தேகநபர்கள் மஹியங்கன நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (ம-4)

## இலங்கையில்
# ஒரு குடும்பத்துக்கு 6 லட்சம் ரூபா கடன்

ராஜபக்சக்கள் தலைமையிலான அரசால், நாட்டின் கடன் ஏற்கனவே இருந்ததை விட 3 ஆயிரம் பில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக அதிகரித்துள்ளது.
அதன் பிரகாரம் இலங்கையில் உள்ள குடும்பமொன்றின் கடன் சுமையானது 6 லட்சத்து 4 ஆயிரத்து 440 ரூபாவாக உயர்வடைந்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவிக்கையில், இலங்கையில் நிறுவப்பட்ட நல்லாட்சி அரசின் முழுமையான ஆட்சிக்காலத்தில் கடன் தொகையானது 5 ஆயிரத்து 545 பில்லியன் ரூபாவால் அதிகரித்திருந்தது. எனினும் கோத்தாபய மஹிந்த [illegible] அரசு அதிகாரத்துக்கு வந்து முதல் 15 மாதங்களில் கடன்தொகையானது 3 ஆயிரத்து 22 பில்லியனால் மேலும் உயர்வடைந்துள்ளது.
இந்தக் காலப்பகுதியில் நாட்டின் நிதி ஆலோசகராக பஸில் ராஜபக்சவே செயற்பட்டிருந்தார் - என்றார். (4)



# இலங்கைச் சிறுவன் கின்னஸ் சாதனை!

கொழும்பு, ஜூலை 13
தமிழகத்தின் கும்மிடிப்பூண்டி இலங்கை தமிழர் அகதிகள் முகாமைச் சேர்ந்த இலங்கைச் சிறுவன் ஒருவர் கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.
16 வயதான ரஞ்சன் திவ்வியேஷ் என்ற மாணவனே இந்த சாதனையை நிகழ்த்தியுள்ளார்.
டிம்பாசனம் மூலம் ஒரு நிமிடத்தில் 34 பலூன்களை உடைத்து இந்த கின்னஸ் சாதனையை அவர் நிகழ்த்தியுள்ளார் என்று தஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது. உக்ரைனைச் சேர்ந்த இளம் பெண் க்ருடாஸ் ருசியானா டிம்பாசனம் மூலம் பின்புறமாக ஒரு நிமிடத்தில் 24 பலூன்களை உடைத்து நிலைநாட்டியிருந்த கின்னஸ் சாதனையையே இந்தச் சிறுவன் முறியடித்துள்ளார். (4)

# மகன் தாக்கியதில் தாயார் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 13
மகனின் கோடரி தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்த தாயார் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் களுத்துறை பாலதோட்டவில் நடந்துள்ளது.
சமைத்துக்கொண்டிருந்த தாயை, சந்தேகநபரான மகன் கோடரியால் அடித்துள்ளார். இதனையடுத்து படுகாயமடைந்த அவர் நாகொட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். எனினும் அங்கு அவர் சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்துள்ளார்.
சந்தேகநபரான மகன் கைதுசெய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-4)

# தீப்பற்றிய பேர்ள் கப்பலிலிருந்து கரையொதுங்கும் கழிவுகள்

கொழும்பு, ஜூலை 13
இலங்கைக் கடற்பரப்பில் தீப்பற்றிய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் இருந்து கழிவுப்பொருள்கள் தொடர்ந்தும் கரையொதுங்கி வருகின்றன. பிளாஸ்ரிக் உள்ளிட்ட பல கழிவுப்பொருள்கள் இரத்மலானை, மொரட்டுவ மற்றும், அங்குலான கடற்கரைகளில் கரையொதுங்கி வருகின்றன.
தற்போது நிலவும் காற்றுடன் கூடிய காலநிலையால் கழிவுகள் மீண்டும் கரையொதுங்கி வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
விபத்து இடம்பெற்று ஒரு மாதம் கடக்கும் நிலையிலும் தொடர்ந்து கழிவுகள் கரையொதுக்கி வருவதால், கரையோரக் கிராமங்கள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளன என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (4)



# தாக்குதலுடன் தொடர்பென நகரசபைத் தலைவர் கைது

கொழும்பு, ஜூலை 13
தாக்குதல் சம்பவம் ஒன்றுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் சிலாபம் நகர சபைத் தலைவர் உள்ளிட்ட இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
சிலாபம் சேதவத்தைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
அதிக வலு கூடிய மோட்டார் சைக்கிள்களைச் செலுத்துவது தொடர்பாக நீண்டகாலமாக ஏற்பட்டு வந்த சர்ச்சையால் இந்த மோதல் ஏற்பட்டுள்ளது என்று ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.
சம்பவத்தில் காயமடைந்த இரண்டு இளைஞர்கள் சிலாபம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
மேலதிக விசாரணைகளை சிலாபம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீராவியடி பிள்ளையாரின் வருடாந்த பொங்கல் விழா

## 10 பேருடன் நடத்த அனுமதி

முல்லைத்தீவு, ஜூலை 13

முல்லைத்தீவு செம்மலை கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள தமிழர்களின் பூர்வீக நீராவியடி பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 13ஆம் திகதி இடம்பெறவுள்ளது. கொரோனா அசாதாரண நிலையைக் கருத்திற்கொண்டு குறித்த பொங்கல் விழாவில், சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி பத்துப் பேர் மாத்திரம் கலந்து கொள்ள கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலகம் அனுமதியளித்துள்ளது. கடந்த 8ஆம் திகதியன்று நீராவியடிப் பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினர், வருடாந்த பொங்கல் விழாவைச் செய்வதற்கான அனுமதியை கடிதம் ஒன்றின்மூலம் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தைக் கோரியிருந்தனர். கடந்த 9ஆம் திகதி இடப்பட்ட கடிதம் ஒன்றின் மூலம் கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் இவ்வாறு நிபந்தனைகளுடன் கூடிய அனுமதியை வழங்கியுள்ளது. (ப-246)



# 145 குடும்பங்களுக்கு உணவுப்பொதிகள்

பருத்தித்துறை, ஜூலை 13

பருத்தித்துறை பிரதேசத்தைச் சேர்ந்த 145 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் அண்மையில் வழங்கப்பட்டன.

பருத்தித்துறை ஐயனார் கலட்டியை பிறப்பிடமாக கொண்ட பிரிட்டனில் வசித்த அமரர் மருத்துவர் சுப்பிரமணியம் ஜெகதாசனின் முதலாம் ஆண்டு நினைவை முன்னிட்டு இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

பொலிகண்டி கிழக்கைச் சேர்ந்த 75 குடும்பங்களுக்கும், புலோலி தென்மேற்கு பகுதியைச் சேர்ந்த 70 குடும்பங்களுக்கும் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-19)

# குருதிக்கொடை முகாம்

கிளிநொச்சி, ஜூலை 13

குருதிக்கொடை முகாம் கிளிநொச்சி தருமபுரம் மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

கண்டாவளை பிரதேச இளைஞர் சேவைகள் மன்றத்தின் நாடாளுமன்ற உறுப்பினரின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் 60க்கு மேற்பட்ட இளைஞர்கள் கலந்து குருதிக்கொடை செய்தனர்.

நிகழ்வில் குருதிக்கொடையாளர்களுக்கு நினைவுச் சான்றிதழ் மற்றும் மரக்கன்றுகள் என்பவை வழங்கப்பட்டன. (ஐ-113)







# 'கப்ருக' தேசிய வேலைத்திட்டம் வவுனியாவில் அங்குரார்ப்பணம்

வவுனியா, ஜூலை 13

வவுனியா மாவட்டத்துக்கான "கப்ருக தென்னங்கன்றுகள் 40 லட்சம் நடும்" தேசிய வேலைத்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்றுமுன்தினம் வவுனியா பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

தென்னை பயிர்ச்செய்கை சபையின் பிராந்திய முகாமையாளர் பெ.உதயச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு இணைத்தலைவருமான திலீபன், வவுனியா மாவட்ட மேலதிக செயலர். தி.திரேஸ்குமார், பிரதேச செயலர் நா.கமலதாஸன் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது ஒருவருக்கு நான்கு வீதம் 125 பயனாளிகளுக்கு தென்னை மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. (ஐ-110)



# மடுப் பிரதேசத்திலும் சௌபாக்கியா கிராமம்

மன்னார், ஜூலை 13

மன்னார் மாவட்டத்தின் மடு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மாதா கிராமத்தில் சௌபாக்கியா உற்பத்தி கிராமம் கடந்த சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருமான காதர் மஸ்தான் கலந்துகொண்டு பெயர் பலகையை திரை நீக்கம் செய்து ஆரம்பித்துவைத்தார்.

குறித்த உற்பத்தி கிராமம் நெசவுத் தொழிலை விருத்தி செய்யும் நோக்கில் அமையப் பெற்றுள்ளது.

மேலும் நிகழ்வில் மன்னார் மாவட்டச் செயலர் திருமதி அ. ஸ்ரான்லி டிமெல், மாவட்டச் செயலக திட்டமிடல் பணிப்பாளர், மடு பிரதேச செயலர், மாவட்ட பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-213)

# அடம்பனில் குருதிக்கொடை



மன்னார், ஜூலை 13

மன்னார் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் மாந்தை மேற்கு பிரதேச செயலகம் மற்றும் மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதையம் இணைந்து ஏற்பாடு செய்த குருதிக்கொடை முகாம் நேற்றுமுன்தினம் காலை அடம்பன் பிரதேச மருத்துவமனையில் இடம்பெற்றது. இதன்போது மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.கேதீஸ்வரன் மற்றும் மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதைய இயக்குநர் அருட்தந்தை அன்ரன் அடிகளார் ஆகியோர் கலந்துகொண்டு குருதிக்கொடை முகாமை ஆரம்பித்து வைத்தனர். இதன்போது அடம்பன் பிரதேச இளைஞர்கள் மற்றும் அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ப-56)



# வறிய குடும்பத்துக்கு வீடு கையளிப்பு

கிளிநொச்சி, ஜூலை 13

கிளிநொச்சி கோணாவில் பகுதியில் பொருண்மியம் நலிந்த குடும்பம் ஒன்றுக்கு இராணுவத்தினரால் வீடு கையளிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கிளிநொச்சி இராணுவ தலைமையக கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் எஸ்.பி.ரணசிங்க கலந்துகொண்டு பயனாளியிடம் வீட்டைக் கையளித்தார்.

நிகழ்வில் கரைச்சி பிரதேச செயலர், இராணுவ உயரதிகாரிகள் மற்றும் கிராம அலுவலர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஐ-113)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அடையாளப்படுத்தலில்லை நடமாடும் தொற்றாளர்கள்!



கொழும்பு, ஜூலை 13
கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளுக்கு எவ்வித அடையாளமும் மேற்கொள்ளப்படாத காரணங்களால், தொற்றாளர்களின் உறவினர்கள் நடாடித்திரிவதை அவதானிக்க முடிந்துள்ளது.

பாணந்துறை சுகாதார அலுவலர் பிரிவில் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்று பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளுக்கு எவ்வித அடையாளங்களும் இல்லாத காரணத்தால், அந்தப் பகுதியில் உள்ள மக்களின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. பொதுச் சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் பிற சுகாதார ஊழியர்களின் வேலைநிறுத்தம் முடிவடைந்து பல நாள்கள் கடந்துவிட்டாலும், பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளுக்கு அவர்கள் தரிசிப்பை மேற்கொள்ளவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-4)

# டெல்டா வைரஸ் நிலைமை: உண்மை மறைக்கப்படுகிறது

### பொ.சு.ப.சங்கம் குற்றச்சாட்டு



**கொழும்பு, ஜூலை 13**

**டெல்டா வைரஸ் நிலைமை தொடர்பான உண்மையான, உத்தியோகபூர்வ தகவல்களை அரசு வெளியிடுவதில்லை என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.**

இது தொடர்பில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோகண தெரிவிக்கையில்,

டெல்டா வைரஸ் பரவல் தொடர்பான தகவல்களை, சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகமும் மறைக்கின்றது. இவ்வாறான முடிவுகளை மூடிய கதவுகளின் பின்னால் எடுக்க முடியாது. தரவுகளை பகிரங்கப்படுத்துவதில்லை என்று தீர்மானித்தால் அதிகாரிகள் அதற்கான காரணங்களை வெளியிட வேண்டும். இல்லாவிட்டால் முழு நாட்டுக்கும் பிரச்சினையே ஏற்படும் - என்றார். (ம-4)

## மாக்சிச லெனினிசக் கட்சியினரால் கோவிட் விழிப்புணர்வு சுவரொட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 13
கொரோனா விழிப்புணர்வுச் சுவரொட்டிகள் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியினரால் பரவலாக ஒட்டப்பட்டுவருகின்றன

கொரோனாவைத் தடுக்க எங்கள் பங்களிப்பு என்ன....?? என்ற தலைப்புடன் உள்ள இச் சுவரொட்டியில் 'முகக்கவசத்தை முறையாக அணிவோம்! தனிமனித இடைவெளியை சரியாகப் பேணுவோம்! கைகளை நன்றாகச் சவர்க்காரமிட்டுக் கழுவுவோம்! நோய் அறிகுறிகளை உணர்ந்தால், சுகாதாரத் துறையினரை அணுகுவோம்! அனைவருக்கும் தடுப்பூசி வழங்கப்படவேண்டும். விழிப்புடன் இருப்போம். கொரோனாவைத் தடுப்போம் இயல்பு வாழ்வை மீட்போம்' ஆகிய வசனங்கள் எழுதப்பட்டுள்ளன. (ஐ)





பைசர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள மன்னாரில் மீனவ கிராமங்களில் ஆர்வம் காட்டிய மக்கள், நீண்ட வரிசையில் நின்று தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டனர். (ப-60)

## நான்கு மாவட்டங்களின் 9 பகுதிகள் முடக்கம்!

நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த ஒன்பது பகுதிகள் நேற்று அதிகாலை முதல் உடன் நடைமுறைக்கு வரும் வகையில தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அதற்கமைவாக அம்பாறை மாவட்டத்தில் கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சில பகுதிகளும், கண்டி மாவட்டத்தின் கண்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சில பகுதிகளும், கொழும்பு மாவட்டத்தின் பிலியந்தலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சில பகுதிகளும் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட சில பகுதிகளும் தனிமைப்படுத்தப் பட்டுள்ளன.

இதேவேளை நுவரெலியா மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 2 கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன என்று கொவிட்-19 பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது. (ம-4)



## பொது இடங்களில் மாஸ்க் கட்டாயம்!

### பொலிஸார் அறிவுறுத்து

கொழும்பு, ஜூலை 13
பொது இடங்களில் முகக்கவசம் அணியாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

பொது இடங்கள், கடைகள், வர்த்தக நிலையங்கள் உள்ளிட்டவற்றில் முகக்கவசம் அணியாத வர்களைக் கைதுசெய்ய விசேட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முகக்கவசம் அணியாதவர்களை கைதுசெய்ய சிவில் உடையிலும், சீருடையிலும் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பொதுமக்கள் அதிகளவில் செறிந்திருக்கும் இடங்களில் கட்டாயமாக முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும். அவ்வாறு அணியத் தவறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும், நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட முடக்க நிலைமை ஓரளவு தளர்த்தப்பட்டுள்ள நிலையில், மக்கள் இவ்வாறு நடந்துகொள்வது துரதிஷ்ட வசமானது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

# டெல்டாவை விரட்டும் சைனோஃபோர்ம்

### ஆராய்ச்சியில் உறுதி





கொழும்பு, ஜூலை 13
சீனாவில் தயாரிக்கப்பட்ட சைனோஃபோர்ம் தடுப்பூசியானது, டெல்டா வைரஸை எதிர்த்து சிறப்பாக செயற்படும். நோய் எதிர்ப்பு சக்தியை வழங்கும் என்று உள்ளூர் ஆராய்ச்சியில் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான ஆய்வின் அறிக்கைகள் இந்த வாரத்தின் நடுப் பகுதியில் வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜெயசுமனவால் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

சைனோஃபோர்ம் தடுப்பூசியைப் பெற்றவர்களுக்கு டெல்டா வைரஸை எதிர்க்கும் சக்தி உள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது - என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

# 190 பேர் கைது



கொழும்பு, ஜூலை 13
சுகாதார அமைச்சால் பிறப்பிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறினர் என்ற குற்றச்சாட்டில் நேற்றும் 190 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

குறித்த குற்றச்சாட்டுக்களுக்காக இதுவரையான காலப்பகுதியில் 49 ஆயிரத்து 449 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்ட 41 ஆயிரம் பேருக்கு எதிராக வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. ஏனையவர்கள் மீது அடுத்த சில வாரங்களில் வழக்குகள் பதிவுசெய்யப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சுகாதார நிறுவனத்தின் உதவிப்பட்டியலில் இலங்கை

**கொழும்பு, ஜூலை 13**

**கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு உலக சுகாதார ஸ்தாபனத்தால் வழங்கப்படும் நிதியுதவி மற்றும் அன்டிஜென் பரிசோதனை உபகரணங்களைப் பெறுவதற்குத் தகுதி பெற்றிருக்கும் 5 நாடுகளின் பட்டியலில், இலங்கையும் உள்ளடக்கப் பட்டுள்ளது.**



இது தொடர்பில் சிறிஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூற்று மருத்துப்பிரிவின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் சந்திம ஜீவந்தர தெரிவிக்கையில்,

உலக சுகாதார ஸ்தாபனத்தால் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் கொரோனா வைரஸ் தொற்றை இனங்காண்பதற்கான அன்டிஜென் பரிசோதனையை முன்னெடுப்பதற்கு, அவசியமான உபகரணங்கள் மற்றும் நிதியுதவியை பெற நாம் கோரிக்கை விடுத்திருந்தோம்.

பல்வேறு நாடுகளாலும் முன்வைக்கப்படும் கோரிக்கைகளில் போட்டித்தன்மையின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட 5 நாடுகளுக்கு மாத்திரமே உலக சுகாதார ஸ்தாபனத்தால் இந்த உதவி வழங்கப்படும்.

குறித்த விண்ணப்பத்துடன் நாம் முன்வைத்திருந்த மாதிரி செயற்றிட்டமானது அங்கீகரிக்கப்பட்டு, நிதியுதவியைப் பெறுவதற்குத் தகுதி பெற்றுள்ளது. தகுதி பெற்ற 5 நாடுகளில் இலங்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளது - என்றார். (ம-4)

# தடுப்பூசி திட்டத்துக்காக 150 மில். டொலர் கடன்

கொழும்பு, ஜூலை 13

இலங்கையின் தடுப்பூசித் திட்டங்களுக்காக, ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 150 மில்லியன் டொலர் கடனைப் பெற அரசு தீர்மானித்துள்ளது.

அதற்கான ஒப்பந்தத்தில் நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கை வதிவிடப் பணிப்பாளர் சென்சென் ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர்.

தடுப்பூசிகளுக்கான செலவு, தடுப்பூசி அடிப்படையிலான கண்காணிப்புப் பொறிமுறைகளை நிறுவுதல், குளிரூட்டப்பட்ட போக்குவரத்து வசதிகள் மற்றும் மருத்துவக் கழிவு முகாமைத்துவம் ஆகிய நடவடிக்கைகளுக்கு இந்தக் கடன் உதவும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-4)

# தடுப்பூசிகளால் எயிட்ஸ் பரவல்?

## *மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் மறுப்பு*

கொழும்பு, ஜூலை 13



கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தப் பயன்ப டுத்தும் தடுப்பூசிகளால், எயிட்ஸ் தொற்று பரவ எந்தவொரு வாய்ப்பும் இல்லை. தடுப்பூசிகள் குருதி மாதிரிகளால் தயாரிக்கப்படுவதில்லை என்று அரச மருந்தாக்கல் கூட்டுதாபனத்தின் தலைவர் மருத்துவர் பிரசன்ன குணசேகர தெரிவித்தார்.

இந்தியாவில் இருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட தடுப்பூசிகளில் எய்ட்ஸ் தொற்று ஏற்படுவதற்கான மூல காரணிகள் உள்ளன என்று செய்திகள் பரவியுள்ளன. அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தத் தகவலை முழுமையாக நிராகரிக்கிறோம். வேறு நோய்க்கான மருந்தொன்று இலங்கைக்கு இறக்குமதி செய்ய தீர்மானிக்கப்பட்ட வேளையில், இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. பின்னர் அரச மருந்தாக்கல் கூட்டுதாபனத்தின் ஆய்வுகளுக்கு உட்படுத்தி அதனை நிராகரித்த பின்னர் மீண்டும் குறித்த மருந்தை இறக்குமதி செய்யத் தீர்மானம் எடுத்தோம். ஆகவே இந்த மருந்துக்கும், தடுப்பூசிக்கும் இடையில் எந்தத் தொடர்பும் இல்லை. தடுப்பூசிகள் முழுமையாக மருந்துகளால் உருவாக்கப்படுகின்றன. உலகில் எங்கேயும் தடுப்பூசிகளால் எய்ட்ஸ் பரவியது என்று பதிவாகவில்லை. எனவே இவ்வாறான தவறாக கருத்துக்கள் பரப்புவதை நிறுத்த வேண்டும். எதிர்காலத்திலும் இவ்வாறான கருத்துக்கள் பரவலாம். ஆனால் அவற்றை நம்பக் கூடாது. உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களை மாத்திரமே மக்களிடம் கொண்டு சேர்க்கப்பட வேண்டும்.

கொவிட் வைரஸ் உலகளவில் பரவிக் கொண்டுள்ள நிலையில் இலங்கையில் இப்போதும் வைரஸ் பரவல் கட்டுப்பாட்டில் உள்ளது. தடுப்பூசி ஏற்றுகின்ற காரணத்தினாலேயே இந்த வேலைத்திட்டம் வெற்றியடைந்துள்ளது. எனவே மக்கள் தடுப்பூசியை ஏற்றிக்கொள்ள வேண்டும். தவறான கருத்துகளைப் பரப்பி மக்களை குழப்ப வேண்டாம் - என்றார். (ம-4)


# 7.1 மில்லியன் தடுப்பூசி இதுவரை இலங்கைக்கு

கொழும்பு, ஜூலை 13



இலங்கைக்கு இதுவரையான காலப்பகுதியில் 7.1 மில்லியன் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இந்த மாத இறுதிக்குள் மேலும் 40 லட்சம் தடுப்பூசிகள் நாட்டை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என்று ஔடத உற்பத்தி, கட்டுப்பாடு மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

அதேவேளை தொற்றுநோயியல் பிரிவால் வெளியிடப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் நாட்டில் இதுவரையான காலப்பகுதியில் முதலாம் கட்டத் தடுப்பூசியை 39 லட்சத்து 7 ஆயிரத்து 253 பேரும், 14 லட்சத்து 23 ஆயிரத்து 239 பேர் இரண்டாம் கட்டத் தடுப்பூசியும் பெற்றுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)



# மேலும் ஒரு தொகுதி பைஸர் தடுப்பூசிகள்

கொழும்பு, ஜூலை 13

மேலும் ஒரு தொகுதி பைஸர் தடுப்பூசியின் 26 ஆயிரம் டோஸ்கள் நேற்று அதிகாலை நாட்டை வந்தடைந்துள்ளன.

தடுப்பூசிகள் முதலில் அமெரிக்காவிலிருந்து கட்டாருக்கு அனுப்பப்பட்டன. அங்கிருந்து எயார்வேஸ் விமானத்தின் மூலமாக நேற்று அதிகாலை 2.35 மணியளவில் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளன.

அதன் பின்னர் தடுப்பூசிகள் குளிரூட்டல் வசதிகளுடன் கூடிய லொறிகளில் அரச மருந்துகள் கூட்டுஸ்தாபனத்தின் களஞ்சியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

# உருமாறிய வைரஸ்களை எதிர்க்கும் இரு தடுப்பூசிகள்

## *தாய்லாந்து ஆய்வில் தகவல்*

கொழும்பு, ஜூலை 13

சினோவாக், அஸ்ராஜெனகா ஆகிய தடுப்பூசிகளைக் கலந்து செலுத்தினால், டெல்டா, அல்பா ஆகிய உருமாறிய வைரஸ்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கும் என்று தாய்லாந்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் தெரிய வந்துள்ளது.

டெல்டா, அல்பா ஆகிய உருமாறிய கொரோனா வைரஸ்களில் இருந்து பாதுகாப்பது தொடர்பாக தாய்லாந்து நாட்டு விஞ்ஞானிகள் ஆய்வு நடத்தினர்.

கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள மருத்துவப் பணியாளர்கள், சாதாரண மக்கள் ஆகியோரைக் கொண்டு இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

அதில் சினோவாக் தடுப்பூசியில் 2 டோஸ் போட்டுக்கொண்டால், அல்பா வைரஸுக்கு எதிராக போதிய நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கும். ஆனால், டெல்டா வைரஸுக்கு எதிராக பாதுகாப்பு கிடைக்குமா என்பதற்கு உத்தரவாதம் அளிக்க முடியாது.

சினோவாக் தடுப்பூசியில் ஒரு டோஸும், அஸ்ராஜெனகா தடுப்பூசியில் ஒரு டோஸும் கலந்து போட்டுக்கொண்டால், அதைவிட அதிக நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கும். 90 வீதத்துக்கு மேல் செயற்றிறன் இருக்கும்.

அதே சமயத்தில், சினோவாக் தடுப்பூசியில் 2 டோஸும், அஸ்ராஜெனகா தடுப்பூசியில் ஒரு டோஸும் தொடர்ச்சியாக போட்டுக் கொண்டால், 99 வீத செயற்றிறன் இருக்கும். அது, டெல்டா, அல்பா ஆகிய இரு உருமாறிய வைரஸ்களுக்கு எதிராகவும் போதிய நோய் எதிர்ப்பு சக்தியை அளிக்கும்.

டெல்டா வைரஸ்க்குக்கு எதிராக மாடர்னா தடுப்பூசியும் போதிய பாதுகாப்பு அளிக்கும்.

ஆனால், தாய்லாந்தில் அதற்குத் தட்டுப்பாடு நிலவுவதால், உயிரை பணயம் வைத்து கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவப் பணியாளர்களுக்கு இந்தக் கலவை, மாற்றுத் தீர்வாக அமையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 நாள்களில் 10 மாவட்டங்கள் தலிபான்கள் வசம் வீழ்ந்தன!

## 8 மாவட்டங்களில் போராடாமலே சரண்

**காபூல், ஜூலை 13**

**அமெரிக்கப் படைகள் வெளியேறிவரும் நிலையில் ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் கைகள் ஓங்கியுள்ளன. கடந்த மூன்று நாள்களில் 10 மாவட்டங்களைத் தலிபான்கள் கைப்பற்றியுள்ளனர். இதில் 8 மாவட்டங்களில் போராடாமலேயே சரணடைந்துள்ளது ஆப்கான் அரச படை.**




கடந்த 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் பதினொராம் திகதி நியூயோர்க் நகரில் அமைந்துள்ளது இரட்டைக் கோபுரம் அல் குவைதா தீவிரவாத அமைப்பால் தாக்கப்பட்டது. அல் குவைதா அமைப்புக்கு தலிபான்கள் உதவி செய்கின்றனர், அடைக்கலம் கொடுக்கின்றனர் என்று தெரிவித்து அந்த அமைப்புக்கு எதிராக தாக்குதல் நடத்தியது அமெரிக்கா. இந்த போரில் ஆப்கானிஸ்தான் படைகளும் அமெரிக்க படைகளின் கீழ் போரிட்டன.
தலிபான்கள் விரட்டப்பட்டு ஜனநாயக அரசு அமைக்கப்பட்டது. எனினும் தீவிரவாதத்துக்கு எதிராக அமெரிக்கா நடத்திய இந்த போரில் இதுவரை அமெரிக்காவால் வெற்றிபெற முடியவில்லை. சுமார் 2,400 அமெரிக்கச் சிப்பாய்களும், 10 ஆயிரம் பொதுமக்களும் கொல்லப்பட்டுள்ளனர். தலிபான்களிலும் கணிசமான இழப்பு ஏற்பட்டுள்ளது.
இந்த நிலையில், ஒபாமாவின் ஆட்சிக் காலத்தில் இருந்து அமெரிக்கப் படைகளை ஆப்கானிஸ்தானில் இருந்து திரும்பப் பெறும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதிபர பைடன் அடுத்த மாதம் 31ஆம் திகதியுடன் அமெரிக்கப் படைகளை முழுமையாகத் திரும்பப் பெறுகின்றார். "ஆப்கானிஸ்தானில் நிலவும் பிரச்சினைகளுக்கு இராணுவ நடவடிக்கை தீர்வு அல்ல. இது ஒரு வெல்ல முடியாத போர்' என்று அமெரிக்க அதிபர் ஜே பைடன் அறிவித்தார்.



இந்த நிலையில் ஆப்கானிஸ்தானை முழுமையாக தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வரும் முயற்சியில் தலிபான்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். ஆப்கானிஸ்தானின் வடமேற்கு பகுதியில் தஜிகிஸ்தான் நாட்டின் எல்லையையொட்டி அமைந்துள்ள படாக்ஸ்கான் மற்றும் கந்தகார் மாகாணங்களில் உள்ள நகரங்களை தலிபான்கள் கைப்பற்றியுள்ளனர். தாக்குதல்களை தடுக்க முடியாமல் ஆப்கானிஸ்தான் சிப்பாய்கள் தலிபான்களிடம் சரணடைந்து வருகின்றனர். அரசு படையைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்ட ராணுவ விரர்கள் தஜிகிஸ்தான் நாட்டுக்கு தப்பியோடியுள்ளனர்.
கடந்த மூன்று நாட்களில் 10 மாவட்டங்கள் தலிபான்களின் வசம் சென்றுள்ளன. இதில் 8 மாவட்டங்களை எவ்வித சண்டையும் போடாமலேயே தலிபான்கள் கைப்பற்றியுள்ளனர். ஆப்கானிஸ்தானின் 85 சதவீத பகுதிகளை தங்கள் வசம் கொண்டு வந்துள்ளோம் என்று தலிபான்கள் அறிவித்துள்ளனர். (ம)

## அமெரிக்காவில் வெப்ப அலை கடல்வாழ் உயிரினங்கள் பலி!

வொஷிங்டன், ஜூலை 13
அமெரிக்காவில் நிலவும் வரலாறு காணாத வெப்ப அலையால் கடல்வாழ் உயிரினங்கள் கொத்துக்கொத்தா மடிகின்றன
பசிபிக் கடற்கரையில் 100 கோடிக்கும் அதிகமான கடல் விலங்குகள் இந்த வெப்ப அலைகளால் இறந்திருக்கலாம் என பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகத்தின் கடல்வாழ் உயிரியலாளர் கிறிஸ்டோபர் ஹார்லி கூறியுள்ளார்.
தட்பவெப்பநிலை மாறிக்கொண்டே இருக்கிறது. அதன் காரணமாகவே பல வியத்தகு வானிலை நிகழ்வுகள், பெரிய வெள்ளம், காட்டுத் தீ போன்ற பல இயற்கை பேரிடர்கள் ஏற்படுகின்றன என அமெரிக்க வானியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம)



## கடுமையான விளைவுகளை விரைவில் ரஷ்யா சந்திக்கும்

மொஸ்கொ, ஜூலை 13
ரஷ்யாவில் இருந்து வரும் சைபர் தாக்குதல்களை தடுக்க முறையான நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் மிகவும் மோசமான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று ரஷ்யாவை அமெரிக்கா அதிபர் பைடன் எச்சரித்துள்ளார்.



அமெரிக்காவில் சமீப காலமாக சைபர் தாக்குதல் மிக பெரும் அச்சுறுத்தலாக மாறி வருகிறது. கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் அமெரிக்க அரசின் முக்கிய துறைகளின் இணையத் தரவுகளில் ரஷ்ய ஊடுருவலாளர்கள் ஊடுருவி உளவு பார்த்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.
அமெரிக்காவின் உள்துறை, பாதுகாப்பு, உள்நாட்டு பாதுகாப்பு, நிதி மற்றும் வணிகம் போன்ற 9 அரசு துறைகள் மற்றும் மைக்ரோசாப்ட் உள்பட 17 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தனியார் நிறுவனங்கள் மீது இந்த சைபர் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த சைபர் தாக்குதலின் பின்னணியில் ரஷ்யா இருப்பதாக குற்றம் சாட்டப்பட்டது. ஆனால் ரஷ்யா அதனை திட்டவட்டமாக மறுத்தது.
இந்த நிலையில் அமெரிக்காவின் மிகப்பெரிய மென்பொருள் நிறுவனமான 'கசேயா' மீது கடந்த 2 வாரங்களுக்கு முன்பு 'ரான்சம்வேர்' தாக்குதல் நடத்தப்பட்டது. இது கடந்த டிசம்பர் மாதம் அரச துறைகளை குறிவைத்து நடத்தப்பட்ட சைபர் தாக்குதலை விட பல மடங்கு பெரிது என சைபர் பாதுகாப்பு வல்லுனர்கள் தெரிவித்தனர்.
இந்த நிலையிலேயே மேற்படி எச்சரித்துள்ளார் பைடன். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

90 வயதுப் பாட்டிக்கு

## ஒரே நேரத்தில் கொவிட்டின் இரு திரிபுகள்!

லண்டன், ஜூலை 13
பெல்ஜியத்தை சேர்ந்த 90 வயது மூதாட்டிக்கு ஒரே நேரத்தில் இரு உருமாறிய கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
கொரோனா வைரஸ் தொற்றின் முதல் அலை பெரும்பாலான நாடுகளில் கட்டுக்குள் வந்த நிலையில், திடீரென வைரஸ் உருமாற்றம் அடைந்து மிகத் தீவிரமாக பரவத் தொடங்கியது. இதில் இந்தியாவில் கண்டறியப்பட்ட டெல்டா வைரஸ் மிகத்தீவிரத் தன்மை கொண்டதாகக் கருதப்படுகிறது. ஒவ்வொரு நாட்டிலும் உருமாறிய கொரோனாவுக்குப் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.
இந்த நிலையில், பெல்ஜியத்தை சேர்ந்த 90 வயது மூதாட்டி ஒருவர், உருமாறிய கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளோமா? என்பதை அறிவதற்காக பரிசோதனை மேற்கொண்டுள்ளார். அப்போது அவர் அல்பா, பீட்டா என இரு வைரஸ்களாலும் தொற்றுக்கு உட்பட்டுள்ளமை கண்டறியப்பட்டது.
ஒரு நபர் ஒரே நேரத்தில் இரண்டு வகை வைரஸ்களால் பாதிக்கப்படுகின்றமை இதுவே முதல் தடவை. (ம)

# கிருஷ்ணா அடைவு கடை

**பதிவு இல : J/DS/BR/472**

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2020 ஆம் ஆண்டு 31.07.2020 இற்கு முன்னர் அடகு நகைகள் யாவற்றையும் 2021 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் திகதி (15.07.2021) இற்கு முன்னர் மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தை கட்டி புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்க தவறின் (15.07.2021) ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறிய தருகின்றோம்.

குறிப்பு: 2020 ஆம் ஆண்டு 05 ஆம் மாதம் முதலாம் திகதி முதல் 2020 ஆம் ஆண்டு 7 ஆம் மாதம் 31 ஆம் திகதிக்கு இடைப்பட்ட நகைகள் யாவும் விற்கப்படும்.

**இல.307, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். 021 4900311**

**உரிமையாளர்**
**இல. 09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் 021 222 5046**

# ஆதன பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல்

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை

## உப அலுவலகம், உடுவில்

**வட்டாரம் -7 செட்டிவளவு ஒழுங்கை , ஆதன இல 39/5**

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் உடுவில் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 7 செட்டிவளவு ஒழுங்கையில் அமைந்துள்ள 39/5 ஆம் இலக்க ஆதனமானது எமது ஆதனவரிப் பதிவேட்டில். உரிமை கோருபவர் V.கார்த்திகேசு V. பஞ்சாட்சரம் நல்லதம்பி குலசேகரம் பிள்ளையும் ஏனையோரும் எனும் பெயரில் உள்ளது.

பிரசித்த நொத்தாரிசு A.S.அற்புதராஜா முகதாவில் வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்கு உடுவில் கோவிற்பற்று இணுவில் இறையில் அமைந்துள்ள "கயங்கப பத்திராயன் எல்லையும் பாப்பா தோட்டமும்" எனக்குறிப்பிடப்பட்டுள்ள நிலப்பரப்பு 0. குளி 8.79 உம் கந்தையா பாலசுப்பிரமணியமும் பெண் டில்லிமலரும் கிருபானந்தா பெண் விஜயமாலினியும் பஞ்சாட்சரம் வில்வேந்திரனும் பஞ்சாட்சரம் சிவவேந்திரனும் ஆகியோரால் வெளிப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாதனமானது எங்கள் 2ம் 3ம் 4ம் 5ம் பேரின் பூட்டியார் வைத்திலிங்கம் செல்லையா பெண் அன்னப்பிள்ளை என்பவருக்குச் சொந்தமாகவிருந்து மரணசாதனமெதுவுமின்றியும் நிர்வாகத்துவபத்திரம் பெறவேண்டிய பெறுமதிக்குக்குறைவான மரணச்சொத்துக்களை விட்டும் அவர் மரணமடைய அவரின் வாரிசாகிய எம்மில் 2ம் 3ம் 4ம் 5ம் பேரின் பேரனார் செல்லையா விஸ்வலிங்கம் என்பவரை மாதாவழி முதுசமாக வந்தடைந்ததென்றும் குறித்த செல்லையா விஸ்வலிங்கம் மரணசாதனமெதுவுமின்றியும் நிர்வாகத்தத்துவபத்திரம் பெறவேண்டிய பெறுமதிக்கும் குறைவான மரணச்சொத்துக்களை விட்டும் மரணமடைய அவரின் பிள்ளைகளாகிய விஸ்வலிங்கம் கார்த்திகேசு குலசேகரம்பிள்ளை பெண் சிவஞானம் தில்லையம்பலம் பெண் ஆஞ்சியம்மா விஸ்வலிங்கம் பஞ்சாட்சரம் ஆகியோரைப் பிதாவழி முதுசமாக வந்தடைந்ததென்றும் குறித்த விஸ்வலிங்கம் கார்த்திகேசு வாரிசுகளின்றியும் மரணசாதனமெதுவுமின்றியும் நிர்வாகத்துவபத்திரம் பெறவேண்டிய பெறுமதிக்குக் குறைவான மரணசொத்துக்களை விட்டும் மரணமடைய அவரின் சகோதரர்களாகிய குறித்த குலசேகரம்பிள்ளை பெண் சிவஞானம் தில்லையம்பலம் பெண் ஆஞ்சியம்மா விஸ்வலிங்கம் பஞ்சாட்சரம் ஆகியோரை சகோதரவழி உரிமைப்பங்காகவும் வந்தடைந்ததென்றும் குறித்த குலசேகரம்பிள்ளை பெண் சிவஞானத்திற்கு இவ்வாதனத்துடன் தொடர்புடைய ஆதனம் ஏற்கனவே வழங்கப்பட்டமையாலும் குறித்த தில்லையம்பலம் பெண் ஆஞ்சியம்மாவும் குறித்த விஸ்வலிங்கம் பஞ்சாட்சரமும் இறந்தமையாலும் இவ்வாதனத்தில் சொரியலாய் அரைவாசி குறித்த தில்லையம்பலம் பெண் ஆஞ்சியம்மாவின் வாரிசாகிய எம்மில் 2ம் பேரை மாதாவழி முதுசமாகவும் மிகுதி சொரியலாய் அரைவாசி குறித்த விஸ்வலிங்கம் பஞ்சாட்சரத்தின் வாரிசுகளாகிய எம்மில் 3ம் 4ம் 5ம் பேரையும் பஞ்சாட்சரம் குஜேந்திரனையும் பிதாவழி முதுசமாகவும் வந்தடைந்ததென்றும் தற்போது இவ்வாதனத்திற்கு 2ம் 3ம் 4ம் 5ம் பேரும் பஞ்சாட்சரம் குஜேந்திரனும் சொந்தக்காரரும் உரித்தாளருமாவோமென்றும் பிரசித்த நொத்தாரிசு ஏ.எஸ் அற்புதராஜ் முகதாவில் 1219ம் இலக்க 2019.08.24 ஆம் திகதிய உறுதி மூலம் வெளிப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது.

மேலும் உத்தரவு பெற்ற உலாந்தா அ.கந்தசாமி அவர்களால் 2019.08.17 இல் அளந்து தயாரிக்கப்பட்ட 5417 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 எனக்குறிப்பிடப்பட்டுள்ள குறித்த நில.பரபூச்சியம் குளி எட்டு தசம் ஏழு ஒன்பதிற்கும் எல்லைகளாக

கிழக்கு :- கைலாயபிள்ளை பாமதியின் ஆதனமும்.
வடக்கு :- ஒழுங்கையும் கிருபானந்தா பெண் விஜயமாலியின் ஆதனமும்
தெற்கு :- விஸ்வலிங்கம் கார்த்திகேசுவிற்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள்
மேற்கு :- கந்தையா பாலசுப்பிரமணியத்தின் ஆதனம்

எனவே மேற்குறித்த ஆதனத்தினை பஞ்சாட்சரம் குஜேந்திரன் தனது பெயரில் பெயர்மாற்றம் செய்வதற்காக விண்ணப்பித்துள்ளார்.

எனவே இப்பெயர்மாற்றம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் அல்லது உரிமை கோருபவர்கள் எவராவது இருந்தால் உரிய ஆவணங்களுடன் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு எவரும் ஆட்சேபனை தெரிவிக்கவோ உரிமைகோரவோ இல்லையெனின் குறித்த ஆதனமானது பஞ்சாட்சரம் குஜேந்திரன் எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

மேலும் இப்பெயர் மாற்றத்தால் ஏற்படக்கூடிய எவ்விளைவுகளிற்கும் வலிகாமம் தெற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**க.தர்ஷன்.**
**தவிசாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை,**
**சுன்னாகம்.**

# சென். ஜோண்ஸ் கல்லூரி
## சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
## தரம் 01, 06 இற்கான மாணவர் அனுமதி 2022
## (விண்ணப்ப முடிவு திகதி நீடிப்பு)

1. அ. விண்ணப்பப்படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 14.07.2021 முதல் 28.07.2021 வரை பெற்றுக்கொள்ளலாம்.
   ஆ. எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
   இ. விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 30.07.2021 வெள்ளிக்கிழமை. அத் திகதிக்கு பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டாது.
2. விண்ணப்பப்படிவங்களை அலுவலக நாட்களில் காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 1.00 மணிவரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.
3. தரம் 01 இற்கான விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (Photocopy) இணைக்கப்பட வேண்டும்.
4. ஒரு படிவத்திற்கானதும். பரீட்சைக்கானதுமான கட்டணம் ரூபா 1500.00
5. வயதெல்லைகள்:
   அ. தரம் 01 விண்ணப்பதாரி 01.02.2016க்கும் 31.01.2017க்குமிடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
   ஆ. தரம் 06 விண்ணப்பதாரி 01.02.2011க்கும் 31.01.2012க்குமிடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
6. தரம் 6 (தமிழ் மொழிமூலம் /இருமொழிமூலம்) அனுமதிக்கான விண்ணப் பங்கள் .மேற்கொள்ளப்படலாம்
7. தரம் 01 இற்குரிய நேர்முகப்பரீட்சைக்கான திகதி அறிவிக்கப்படும்.
8. தரம் 06 இற்கான பிரவேசப் பரீட்சை 16.10.2021 சனிக்கிழமை காலை 08.00 மணிக்கு ஆரம்பமாகும்

### தரம் (A/L 2023) இற்கான அனுமதி

- தரம் 12 இற்கான (A/L 2023 Batch)(விஞ்ஞானம் (தமிழ் / ஆங்கில மொழிமூலம்). கணிதம் (தமிழ் /ஆங்கில மொழிமூலம்). வர்த்தகம் (தமிழ் / ஆங்கில மொழிமூலம்). கலை (தமிழ் மொழி மூலம்). தொழினுட்பவியல் (தமிழ் மொழிமூலம் - சென். ஜோண்ஸ் கல்லூரியில் மட்டும்). விண்ணப்பங்கள் அந்தந்த கல்லூரிகளில் க.பொ.த சா/த பரீட்சை பெறுபேறுகள் கிடைக்கப் பெற்றவுடன் ஏற்றுக்கொள்ளப்படும். இது தொடர்பாக அந்தந்தக் கல்லூரி அலுவலகங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**குறிப்பு :**

- தகுதியுடையவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் தரம் 5 புலமைப்பரிசில் நிதி தனியார் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அரசாங்கத்தால் தொடர்ந்து வழங்கப்படுகிறது.
- சென்.ஜோண்ஸ் கல்லூரியில் தரம் 6 இற்கு மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான புலமைப் பரிசில் வாய்ப்புகள் வழங்கப்படும்.

**அதிபர்கள்**

# மரண அறிவித்தல்

**தோற்றம்** 01 . 07 . 1929



**மறைவு** 12 . 07 . 2021

# இரத்தினம் கண்மணி

இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் கண்மணி நேற்று (12.07.2021) திங்கட்கிழமை பகல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி - நாகம்மா தம்பதியரின் சிரேஸ்ட புத்திரியும், நல்லையா - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இரத்தினத்தின் பாசமிகு மனைவியும், பாலகுமார் (ஓய்வுபெற்ற அதிபர்- யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரி), புஸ்பராணி (ஓய்வுபெற்ற ஆசிரியர் - திருநெல்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை), யோகராணி (லக்கி - தையல் போதனாசிரியர் பிரதேச செயலகம் - கோப்பாய்), விஜியராணி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், செந்தில்மணி (ஓய்வுபெற்ற ஆசிரியர் - திருநெல்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை), இரத்தினராசா (ஓய்வுபெற்ற சுகாதார மேற்பார்வையாளர் யாழ். மாநகரசபை), சுந்தரராஜன் (கணக்காளர் வண்ணை வைத்தீஸ்வரன் கோவில்), குகன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், தாட்சாயினி (ஹற்றன் நசனல் வங்கி - யாழ்ப்பாணம்) சங்கீதா (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் நல்லூர்), கார்த்திகா (அஞ்சல் அதிபர், அஞ்சல் அலுவலகம் யாழ்ப்பாணம்), ஆரணி (அபிவிருத்தி உத்தியோகத்தர் தொழிதுறைத் திணைக்களம் - வட மாகாணம்), துவாரகா (மாணவி - யாழ். பல்கலைக்கழகம்) சிந்து (மாணவி - யாழ். பல்கலைக்கழகம்), சுமித்தா (மாணவி - யாழ் இந்து மகளிர் கல்லூரி), சஞ்சித்தா, கரயத்திரி, சரூன், விதுசா (கனடா), Dr. திவாகர், நவதர்ஷன் (ஆசிரியர் - மு/பாண்டியன் குளம் மகாவித்தியாலயம்), இராஜேஸ் கண்ணன் (வர்த்தகர்), மயூரன் (ஆசிரியர் - யாழ். மத்திய கல்லூரி), பார்தீபன் (ஆசிரியர் - கலவெட்டி திடல் நாகேஸ்வரா வித்தியாலயம், கிளிநொச்சி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், துவாரகன், தக்ஷயா, தானியா, ஆஷரா, ஆஷிகா, டிலக்சி, ஆதிரா, அபிஷேக், அக்ஷயன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2021) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் திருநெல்வேலி கிழக்கில் உள்ள " நல்லை ரெட்ணாபதியில்" நடைபெற்று தகனக் கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**(சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படும்)**

**தகவல்: இ.பாலகுமார்**
**(ஓய்வுநிலை அதிபர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலையாள்கள் தேவை

கைத்தொழில் அமைச்சினால் நிர்வாகிக்கப்படும்
**ஆனையிறவு உப்பளத்திற்கு,**
## உப்பினை அறுவடை செய்வதற்கு
**வேலையாள்கள் தேவைப்படுகின்றனர்.**

தங்கள் வரவு மற்றும் வேலை இலக்கிற்கேற்ப சம்பளம் நாளாந்த மாகவோ / மாதாந்தமாகவோ வழங்கப்படும். பூரண உடற்தகுதி யுடையோர் **பிறப்புச் சான்றிதழ்** மற்றும் **தேசிய அடையாள அட்டையுடன் நேரடியாக வருகை தரவும்.** மேலதிக தகவல்களை **021 320 4556 / 1065** என்ற தொலைபேசி இலக்கங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**முகாமையாளர்,**
**ஆனையிறவு உப்பளம்,**
**A9 வீதி, கிளிநொச்சி.**

---

**யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வ-து)**

# பதவி வெற்றிடம்
## விண்ணப்பம் கோரல் - வெளிவாரி
## பதவி - கிராமிய வங்கி முகாமையாளர் 205/12

01. சம்பள அளவுத்திட்டம் : -
(கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் 04/2018 சுற்று நிருபத்திற்கமைய 205/12 ஆவது சம்பளக் குறியீட்டின் படி சம்பளத்திட்டம்.
16780-150x10-165x10-19930
201360-1800 x10 -1980x10-239160
இதர படிகள் , விசேட படிகளும் வழங்கப்படும்.
02. வயதெல்லை : - 18 – 45 (சங்கப்பணியாளர்களுக்கு வயதெல்லை பொருந்தாது )
03. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் : -
அ). கூட்டுறவு ஊழியர் 13 வது சம்பளத்திட்டத்தில் கிராமிய வங்கிப் பிரிவு பதவியொன்றில் ஆகக்குறைந்தத் இரண்டு (02) ஆண்டு கால அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 14 வது சம்பளத்திட்டத்தில் கிராமிய வங்கிப்பிரிவு பதவியொன்றில் ஆகக்குறைந்தது-நான்கு (04) ஆண்டு கால அனுபவம்.

**அல்லது**

ஆ). கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரத்துடன் கிராமிய வங்கி பகுதி இலிகிதர் பதவியில் ஆகக்குறைந்தது மூன்று (03) ஆண்டு கால அனுபவம்
**விண்ணப்ப முடிவுத் திகதி : -** 2021.07.27
04. விண்ணப்பிக்கும் முறை : -
மேற்படி பதவிக்கான விண்ணப்ப படிவத்தினை சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் ரூபா. 10.00 இனை செலுத்திப் பெற்று, பூரணப் படுத்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகளும் இணைத்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில். **" கிராமிய வங்கி முகாமையாளர் 205/12 பதவிக் கான விண்ணப்பம்" எனக்குறிப்பிட்டு " தலைவர், யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறச் சங்கம் (வ-து). இல. 127, கே.கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்." என்னும் முகவரிக்கு** 2021.07.27 ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வ-து).**

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

**வெளிவாரிப் பரீட்சைகள்**
**வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி (வெளிவாரி)**
- **மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை - 2019**

மேற்படி பரீட்சையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் செப்டெம்பர் மாதமளவில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்கு தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்திலோ அல்லது www.codl.jfn.ac.lk எனும் இணையத்தள முகவரியிலோ விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி பரீட்சைகளுக்கான பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி **02.08.2021 (திங்கட்கிழமை)** ஆகும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களினை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.15 மணி வரை) சமர்ப்பிக்கலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்ப விரும்புவோர் கீழ்த் தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

**பிரதிப் பதிவாளர்,**
**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி**

**குறிப்பு :** நாட்டின் தற்போதைய நிலைமையினை கருத்திற்கொண்டு இப் பரீட்சையானது மாணவர் களுக்கான குறுகிய கால அவகாசத்துடன் நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது என்பதை கருத்திற்கொள்க.


மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

**பதிவாளர்**
**12.07.2021**

---

# 21 ஆம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும்.

மண்ணில்
12
05
1940



விண்ணில்
26
06
2021

அமரர்
## மயில்வாகனம் பொன்னம்பலம்


கடந்த ( 26.06.2021 ) வெள்ளிக்கிழமை கரணவாய் வடக்கு மூத்த விநாயகர், முதலைக்குழி முருகன் திருப்பாதமடைந்த எனது அன்புக் கணவர் அமரர் மயில்வாகனம் பொன்னம்பலம் அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அன்பர்களுக்கும் தொலைபேசி வாயிலாக துயரத்தைப் பகிர்ந்து கொண்டோருக்கும் எனது நெஞ்சு நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எதிர்வரும் (15.07.2021) வியாழக்கிழமை அதிகாலையில் நடைபெறவுள்ள கல்லெடுப்பு நிகழ்வு கீரிமலைத் தீர்த்தக் கரையிலும் அதனைத் தொடர்ந்து வீட்டில் நடைபெறும் சபிண்டீ கிரியைகளிலும் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் பணிவன்புடன் அழைக்கின்றோம். ( தற்போதைய சுகாதார நடைமுறைக்கமைய நடைபெறும்.)

**யாமா வளவு**
**காசிப்பிள்ளையார் கோவிலடி,**
**தெல்லிப்பழை**

**குடும்பத்தினர்**
**மனைவி**
**திருமதி கலாதேவி பொன்னம்பலம்**

---

# மரண அறிவித்தல்



அமரர்
## பொன்னம்பலம் இரத்தினசபாபதி
**( கண்ணன் )**

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் - இரத்தினசபாபதி நேற்று (12.07.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் - சிவபாக்கியம் தம்பதியினரின் பாசமிகு மகனும் நாகலிங்கம் - பூமணி தம்பதியினரின் பாசமிகு மருமகனும் மகாலட்சுமியின் அன்புக் கணவரும், கலாநிதி, சுபத்திராதேவி, ஈஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தி[illegible]ன், திவாகரன், தினேஷ்(சுரேன்) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் சுபாஜினி, லோஷிகா, கீர்த்திகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சயந்தவி, தூயவன், லியோனா ஆகியோரின் அன்புப் பேரனும் சோதிராணி, காலஞ்சென்ற கமலேந்திரன், தவச்செல்வி, இராஜேஸ்வரி, காலஞ்சென்றவர்களான பரராஜசிங்கம், வன்னியசிங்கம், பாலச்சந்திரன், அசோக்குமார் மற்றும் நாகரத்தினம், இராசலஷ்மி, தனலஷ்மி, சுப்புலஷ்மி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2021) செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மருதனார்மடம் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**மகளிர் கல்லூரி மேற்கு வீதி,**
**உடுவில், சுன்னாகம்.**

**தகவல் : குடும்பத்தினர்**
**077 474 4680**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 16 . 03 . 1949

மறைவு 20 . 06 . 2015

அமரர்

**கவிஞர் ஐயாத்துரை வரதராஜா**

( ஓய்வுநிலை உத்தியோகத்தர் யாழ் மாவட்ட செயலகம் )

நீங்காத நினைவுகள் நித்தமும் மலர

தூங்காத விழிகள் ஏங்கியே தேடிட

பாங்காக எமைவளர்த்த பண்புயர் தெய்வமே

பாரினிலே ஆறாண்டுகள் பறந்தோடிச் சென்றதுவோ..!

என்றும் எம் நினைவுகளில்

நிலையாக வாழ்வீர்கள் அப்பா.

59, கலைமகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்

நினைவுகளுடன்... மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்



வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை

பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம் மாதகல்

**ஆதனப் பெயர்மாற்ற அறிவித்தல்**

**வட்டாரம் :-** 12

**ஆதன இல :- வெற்றிலக்கம்** 158/22

**வீதி :- சென். ஹென்றிஸ் வீதி, இளவாலை.**

**கிராம சேவையாளர் பிரிவு :-** J/155

எமது இடாப்பில் மேற் குறிப்பிடப்பட்ட இலக்கத்தில் அமைந்துள்ள இவ் ஆதனமானது. உறுதிப்படி வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். வலிகாமம் தென்மேற்கு பகுதி பண்டத்தரிப்பு கோவிற்பற்று சிறுவிளான் இறை வலி தென்மேற்கு பிரதேச சபை. வலி தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவு. J/155 கிராம சேவையாளர் பிரிவில் அமைந்துள்ள "புலிவளைந்தான்" பரப்பு நில. இலாச்சம் ஆறு இதில் ஏற்கனவே நிந்தப்படுத்தி கிழக்குப் பக்கமாக அறுதி விற்ற பரப்பு நில. இலாச்சம் மூன்று போக மிகுதி மேற்குப் பக்கமாக நிந்தப் படுத்தியுள்ள பரப்பு நில. இலாச்சம் மூன்று இதில் வடக்குப் பக்கமாக பிரித்து விடப்பட்ட பரப்பு நில. இலாச்சம் ஒன்றரை. இவ் பரப்பு நில. இலாச்சம் 1 1/2 க் கும் எல்லைகள்.

**கிழக்கு:** செபமாலை கெலமனுக்கும் பெண் அனுசியாவுக்கும் உரிய ஆதனம்

**வடக்கு:** ஒழுங்கை

**மேற்கு:** சுவானி யேசுரத்தினத்திற்குரிய ஆதனம்

**தெற்கு:** நன்கொடை கொடுப்பவருக்கு உரிய மிகுதி ஆதனம்.

இவ்வெல்லைப்படி இதடங்கலும் ஆகும்.

குறித்த இவ் ஆதனமானது உறுதி இலக்கங்கள் 3601/11.11.1989 (M.சபாநாதன்). 5611/26.10.2002 (M.சபாநாதன்). 4812/13.10.2014 (இ.த.அன்ரன் பாலசிங்கம்) என்பவற்றின்படி நடராசா சந்திரமோகன் பெண் யூலி அனிதா என்பவருக்கு நன்கொடையாக வந்தடைந்தமையினை உறுதிப்படுத்தி எமது பண்டத்தரிப்புக் கிராம உப அலுவலக (மாதகல்) ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர். நில அளவையாளர் திரு. அ. சந்தியாப்பிள்ளை அவர்களால் அளந்து வரையப்பட்ட 2979ம் இலக்க 27.02.2019ம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் "புலிவளைந்தான்" எனப்பெயர் கொண்ட இவ் ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரித்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும். அவ்வாறு யாரும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது நடராசா சந்திரமோகன் பெண் யூலி அனிதா எனும் வ பெயருக்கு ஆதனப் பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப் படும் என்பதனையும் அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.




திரு.அ.ஜெயநேசன் தவிசாளர்

வலிகாமம் தென் மேற்குப் பிரதேசசபை,

மானிப்பாய்.


# சிசுவை எரித்துக்கொன்ற தாய் கவ்விச்சென்று காட்டிய நாய்கள்

## திருமலையில் சம்பவம்

திருகோணமலை, ஜூலை 13

திருகோணமலை கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சிசுவொன்றை பெற்றெடுத்து கொலை செய்து எரித்த குற்றச்சாட்டில் சிசுவின் தாயொருவரை நேற்றுமாலை கந்தளாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மத்ரஸாநகர் பேராறு கந்தளாய் பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய இளம் தாய் ஒருவரே கைதுசெய்யப்பட்டுள்ளார். அவருக்கு ஏற்கனவே மூன்று பிள்ளைகள் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அந்தப் பெண்ணின் கணவர் வெளிநாடு சென்றுள்ளார் எனவும் பிறந்த சிசு பெண் குழந்தையெனவும் கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தநிலையில் குறித்த பெண் வேறு ஒரு நபருடன் கொண்டிருந்த தகாத உறவின் மூலமாக உருவாகியது என்று கூறப்படும் சிசு நேற்றுமுன்தினம் இரவு பிறந்துள்ளது. அந்த சிசுவை கொலைசெய்து எரித்த நிலையில், அதனை தெருநாய்கள் கவ்விச் சென்றுள்ளன. அதை அவதானித்த அயலவர்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கினர். பொலிஸார் அந்தத் தாயாரைக் கைதுசெய்தனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (த-இ)


## பணியாளர் வெற்றிடம்

யாழ் மாவட்டத்தில் முன்னணி

**தளபாட உற்பத்தி நிறுவமான** EUT யில்

கீழ்வரும் தகுதி நிலைகளில் பதவி வெற்றிடம் உண்டு.

**01. வாகன சாரதி** (A, D வாகன ஓட்டுநர் உரிமம்)

**02. வேலைத்தள பணியாளர்கள்** (ஆண். பெண்)

**Equip Unit Trust,**

Palaly Road, Punnalaikkadduvan South.

T.P : 021 224 0110 / 0776566873



## வேலை வாய்ப்பு அறிவித்தல்

**துணை கிளை செயற்பாட்டாளர் (ஆண்/ பெண்)**

**யாழ்ப்பாணக் கிளை**

தகைமைகள் : க.பொ.த சாதாரண தர சித்தி

: ஆங்கில மொழியில் சிறந்த தொடர்பாடல் திறன்

: சிறந்த கணினி அறிவு

: மோட்டார் சைக்கிள் Licence பெற்றிருத்தல்

வயது : 25க்கு குறைவு

**உங்களது சுய விபரக் கோவையை 10 நாட்களுக்குள் அனுப்பவும்.**

info@tradefirst.lk

தொடர்புகளுக்கு **077 485 0027**



## கண்ணீர் அஞ்சலி



திருமதி

**லட்சுமி கிருஸ்ணன்**

எமது பாடசாலை ஆசிரியை திருமதி. நாகேஸ்வரி நகுலேஸ்வரன் அவர்களின் அன்புத் தாயார் **லட்சுமி கிருஸ்ணன்** அவர்கள் (10.07.2021) சனிக்கிழமை இறைபதமடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆன்ம சாந்திக்காக இறைவனை வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**

**யா/மிருசுவில் றோ.க.த.க பாடசாலை**



## கண்ணீர் அஞ்சலி



எமது சங்கத்தின் அங்கத்தவரும்,

**கௌதமி வெதுப்பகத்தின் உரிமையாளருமாகிய**

**திரு. பூ. விமலராஜன்** அவர்களின் அன்புத் தாயார்

**பூவையா பங்கயம்**

அவர்கள் 11.07.2021 அன்று அமரத்துவம் அடைந்ததையிட்டு மிகவும் மனம்வருந்துவதுடன் அவரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**சங்கத் தலைவர், அங்கத்தவர்கள், பணியாளர்கள்**

**யாழ்.மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**



## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி. புஸ்பராசா எட்விசா அவர்களின் அன்புத் தந்தையார்.

அமரர்

**சின்னப்பு ஞானப்பிரகாசம்**

தோற்றம் 17.07.1936

மறைவு 10.07.2021

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரதேச செயலரும் உத்தியோகத்தர்களும்,**

**உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம் - பிரதேச செயலகம், கோப்பாய்**


# பொதுவிடங்களில் மருந்து விசிறல்

சாவகச்சேரி, ஜூலை 13

கொரோனாத் தொற்றுக் காரணமாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையினர் மாவட்டத்தில் உள்ள பொது இடங்களில் மருந்து விசிறும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மாவட்டத்தில் உள்ள நீதிமன்றங்கள், மாவட்டச் செயலகம், பிரதேச செயலகங்கள் ,பொதுமக்கள் கூடும் சந்தைகள் மற்றும் பஸ் நிலையங்கள் போன்றவற்றில் மருந்து விசிறும் பணிகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ-9)


## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச்சேர்ந்த 1984இல் சதய நட்சத்திரத்தில் பிறந்த 2இல் செவ்வாய் உள்ள மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.

தொடர்பு: **077 945 9583**



## 35ஆம் ஆண்டு நினைவலைகள்



**தம்பிராசா ஸ்ரீதரன்**

தோற்றம் 22.02.1955

மறைவு 13.07.1986

**வ.நா.தம்பிராசா**

**மன்னார் எக்ஸ்பிரஸ்**

**கே.கே.எஸ். வீதி, இணுவில் கிழக்கு.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் உறுப்பினர்கள் பஸில் ராஜபக்சவுடன் சந்திப்பு

கொழும்பு, ஜூலை 13
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களிடையிலான சந்திப்பு அலரிமாளிகையில் நேற்று நடைபெற்றது.
2006-2007 ஆம் ஆண்டுகளில் நிலவிய பொருளாதார சவால்களை வெற்றிகொண்டதைப்போல இந்தமுறையும் பொருளாதார சவால்களை அமைச்சர் பஸில் ராஜபக்ச நிச்சயமாக வெற்றிகொள்வார் என இந்தச்சந்திப்பில் கலந்துகொண்ட மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.
2006- 2007 மற்றும் 2008ஆம் ஆண்டுகளில் போர் இடம்பெற்றபோது நாட்டின் வெளிநாட்டு நாணய இருப்பு 1.2 பில்லியன் டொலரைவிட குறைந்த நிலையிலும் கிராமியப் பொருளாதாரத்தை பஸில் ராஜபக்ச மேம்படுத்தினார் என்று அவர்கள் நினைவுகூர்ந்து உள்ளனர். அரசின் முன்னுரிமைகளுக்கு முக்கியத்துவமளித்து சுபீட்சத்தின் நோக்கை எதார்த்தம் ஆக்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதை தனது முக்கிய பொறுப்பாக கருதி செயற்படுகின்றேன் என்று நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச இதன்போது தெரிவித்துள்ளார்.
அரசின் பொறுப்புகள் மாத்திரமல்லாது கட்சிக்காக நிறைவேற்றவேண்டிய பொறுப்புகளையும் தயக்கமின்றி நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிப்புச் செய்கின்றேன். இதற்காக அனைவரது ஒத்துழைப்பையும் நாம் எதிர்பார்க்கின்றேன் என்றும் பஸில் ராஜபக்ச தெரிவித்துள்ளார். (த-இ)

# நாட்டில் பெரும்பாலானோருக்கு இரண்டு மாதங்களுக்குள் தடுப்பூசி

## கோத்தா திட்டவட்டம்

கொழும்பு, ஜூலை 13
எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்கு முன்னர், நாட்டின் மொத்தச் சனத்தொகையில் பெருமளவானோருக்குக் கொரோனாத் தடுப்பூசி வழங்குவதற்கான விரிவான திட்டத்தை ஜனாதிபதி கோத்தாபய முன்வைத்துள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.
கொவிட் பரவும் ஆபத்து அடையாளம் காணப்பட்டுள்ள மாவட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து, இந்த மாதத்துக்குள் கிடைக்கும் தடுப்பூசிகளை அம்மக்களுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
அடுத்த இரண்டு வாரங்களில், 1.47 மில்லியன் அஸ்ராஜெனகா தடுப்பூசிகள் கிடைக்கவுள்ளன. இவற்றில் 6 லட்சம் தடுப்பூசிகள், ஏற்கனவே முதலாவது டோஸ் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்ட கொழும்பு மாவட்ட மக்களுக்கு ஒதுக்கப்படும். மீதமுள்ளவற்றை, கேகாலை மாவட்ட மக்களுக்காக, முதலாவது மற்றும் இரண்டாவது டோஸ்களுக்கென வழங்குமாறும், ஜனாதிபதி அறிவுறுத்தினார்.
தற்போது கிடைக்கப்பெற்றுள்ள ஃபைசர் தடுப்பூசிகளை மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களுக்கும் மொடர்னா தடுப்பூசிகளைக் கண்டி மாவட்டத்துக்கும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் பின்னர் கிடைக்கவிருக்கும் தடுப்பூசிகளை, கொவிட் பரவலைக் கருத்திற்கொண்டு, விஞ்ஞான பூர்வமாக விநியோகிக்க முடிவு செய்யப்பட்டது.
தற்போது கணிசமான சதவீதமானவர்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதால், பொருளாதார நடவடிக்கைகளுக்காக அதிக சந்தர்ப்பத்தை வழங்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும், ஜனாதிபதி அறிவுறுத்தினார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ.இ)

துமிந்த நாகமுவவை முற்படுத்துமாறு

# மேன்முறையீட்டு நீதிமன்றில் எழுத்தாணை மனுத் தாக்கல்

கொழும்பு, ஜூலை 13
முன்னிலை சோசலிசக் கட்சியின் பரப்புரைச் செயலாளர் துமிந்த நாகமுவவை, உடனடியாக நீதிமன்றில் முற்படுத்துமாறு இடைக்கால உத்தரவொன்றை பிறப்பிக்கக் கோரி, மேன்முறையீட்டு நீதிமன்றில் ஹபயாஸ் கோபஸ் ரிட் எனும் ஆட்கொணர்வு எழுத்தாணை மனு நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டது. துமிந்த நாகமுவவின் மனைவி, துலானி பிரியங்கிகா குறித்த மனுவை சட்டத்தரணி நுவான் போபகே ஊடாக நேற்றுத்தாக்கல் செய்தார்.
பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரத்ன, மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், கொம்பனித் தெரு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தன, கொழும்பு மாநகர சபையின் பிரதான சுகாதார மருத்துவ அதிகாரி ருவன் விஜேமுனி, பல்லேகலை தனிமைப்படுத்தல் நிலையத்தின் பொறுப்பதிகாரி/ கட்டளைத் தளபதி மற்றும் சட்ட மா அதிபர் ஆகியோர் குறித்த மனுவில் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.
கடந்த 7 ஆம் திகதி, முன்னிலை சோசலிசக் கட்சியின் பரப்புரைச் செயலர் துமிந்த நாகமுவ உள்ளிட்ட 7 பேர், இலங்கை பொறியியல் கூட்டுத்தாபனத்தின் இரு ஊழியர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டமைக்கு எதிராக அமைதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். அதன்போது கொம்பனித் தெரு பொலிஸரால் கைதுசெய்யப்பட்டனர் என்று மனுதாரர் 8 பக்கங்களைக் கொண்ட ஆள்கொணர்வு மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.
அவர்கள் கோட்டை நீதிவான் நீதிமன்றில் அன்றையதினம் முற்படுத்தப்பட்டபோது பிணையில் விடுவிக்கப்பட்டனர். நீதிமன்றில் பிணை கையெழுத்திட்டு நகர்ந்து செல்லும் போது பொலிஸாரால் தடுக்கப்பட்டு அவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட வேண்டும் எனக்கூறி வலுக்கட்டாயமாக அழைத்து செல்லப்பட்டனர் என்றும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.
இதற்காக பொலிஸார் எத்தகைய ஆவணங்களையும் மனுதாரருக்கு காண்பிக்கவில்லை எனக் கூறும் மனுதாரர், பொலிஸாரால் அழைத்துச்செல்லப்பட்டவர்கள், தற்போது பல்லேகலை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று அறிய முடிகின்றது என்றும் குறிப்பிட்டுள்ளார்.
எனவே எந்த சட்ட ரீதியிலான அடிப்படைகளும் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள தனது கணவரை உடனடியாக விடுவித்தும், அவரை இந்த மன்றில் முற்படுத்த பிரதிவாதிகளுக்கு உத்தரவிடுமாறும் மனுதாரர் மேன்முறையீட்டு மன்றிடம் கோரியுள்ளார். துமிந்த நாகமுவவுடன் கட்டாய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட மேலும் சிலர் சார்பிலும் ஆட்கொணர்வு எழுத்தாணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-இ)


ASTP®
Your Partner in IT Solution
49, 1st Cross Street, Jaffna.

We ASTP Tec Pvt Ltd, operating in Northern province as a computer service provider for a last 25 Years.

**Walk in interview**


1.Accountant
1. Minimum 1 year Experience in related field
2. Ability to work well with team members and independently
3. Minimum qualification is HNDA or any related Diplomas

2.Receptionist-வரவேற்பாளர்- பெண்
1. உயர்தரத்தில் சித்தி
2. ஆங்கிலத்தில் புலமை
3. மூன்றாம் மொழியறிவு-மேலதிக தகமையாகும்

Salary is negotiable
தகமை உடையோர் 15/07/2021 காலை 10மணிக்கு நேர்முகத் தேர்விற்காக இல.49 1ம் குறுக்குத் தெரிவிலுள்ள எமது அலுவலகத்திற்கு நேரில் அழைக்கப்படுகின்றீர்கள்.
மேலதிக தகவலிற்கு அழையுங்கள்: 0212228147/0212222674


# மரண அறிவித்தல்

தோற்றம்
24 . 02 . 1973



மறைவு
11 . 07 . 2021

## சின்னையா மணிவண்ணன்

தம்பலடி, பொலிகண்டி கிழக்கு, வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகவும் தெஹிவளை, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட **சின்னையா மணிவண்ணன்** கடந்த (11.07.2021) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற சின்னையா (ஓய்வு பெற்ற பிரதம இலிகிதர் பிரதேச செயலகம், பருத்தித்துறை) செல்வமலர் தம்பதிகளின் அன்பு மகனும் கௌரியின் அன்புக் கணவரும் இன்பமலர் (ஆசிரியர் யா/வல்வை சிவகுரு), மதிவதனி (சுவிஸ்), சிவச்செல்வி (விரிவுரையாளர் - வாழ்க்கை தொழில்சார் தொழில்நுட்பவியல் கல்லூரி இரத்மலானை), மயூரன் (இலண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஸ்ரீகுமரபரன் (ஆசிரியர் யா/கொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலை), பகீரதன் (சுவிஸ்), உருத்திரன் (விரிவுரையாளர், வாழ்க்கை தொழில்சார் தொழில்நுட்பவியல் கல்லூரி), தாரணி (இலண்டன்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் கிருத்திகா (HNB Head office), செந்தூரன், நவீனன் (சுவிஸ்), மதீனன் (சுவிஸ்), சாங்கவி, ஸ்ரீராம் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் மதுவந்தியன் (இலண்டன்) ஆகியவரின் அன்புப் பெரியப்பாவும், காலஞ்சென்ற கந்தசாமி, இராசமலர், ரூபசௌந்தரி ஆகியோரின் பெறாமகனும் காலஞ்சென்ற செல்லம், குலேந்திரராசா (சுவிஸ்) ஆகியோரின் மருமகனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.07.2021) புதன்கிழமை காலை 10.30 மணியளவில் அன்னாரின் பொலிகண்டி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஊறணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible] 406 5556
[illegible] 671 7393
071 491 0462

தகவல்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












## ஒரு நிமிடம் பொறு

ஒரு முறை கடவுளிடம் பேசிக்கொண்டிருந்த மனிதன் கேட்டான்:
"சாமி, ஒரு கோடி வருசம் என்பது உங்களுக்கு எவ்வளவு நேரம்?"
இறைவனும் சிரித்துக்கொண்டே "ஒரு கோடி வருசம் ஒரு நிமிசம்" என்றார்.
அதைக் கேட்டு சந்தோசமடைந்த மனிதன் "அப்படி என்றால், ஒரு கோடி ரூபா?" அவரும், "ஒரு ரூபா போல" என்றார்.
உடனே, கடவுளை மடக்க எண்ணியவனாய் "அப்ப, எனக்கு ஒரு ரூபாய் கொடுங்களேன்" என்றான் மிகவும் அடக்கமாய்... இறைவனும் மென்மையாக சிரித்துக் கொண்டே "நீ ஒரு நிமிஷம் பொறு" என்றார்.

ச ப் பா ணி@manipmp

சுகரற்ற வாழ்வே
நிகரற்ற செல்வம்

போன் வந்தபிறகு தான்
பொய் பேசுவது அதிகமாகியது.!

அசைவ உணவு செய்வதே ஸ்டேட்டஸ்
வைக்கத்தான் என்றாகிவிட்டது

கோழியின் கிறுக்கல்!! @Kozhiyaar

நடுநிலைமை என்பது, வடிவேலு
கொண்டையை மறைக்க
முயல்வதைப் போன்றதே!!




## 'மஹா' படத்தின் டீஸர் சாதனை!

சிம்பு , ஹன்சிகா மோத்வானி நடிப்பில் உருவாகி உள்ள 'மஹா' படத்தின் டீசர் வெளியான 3 நாளில் ஒரு மில்லியன் பார்வையாளர்களை கடந்து சாதனை படைத்துள்ளது. இயக்குநர் யு.ஆர். ஜமீல் இயக்கத்தில் உருவாகி உள்ள இப்படத்துக்கு ஜிப்ரன் இசையமைத்துள்ளார்.

ஹான்சிகா மோத்வானி, சிம்பு, ஶ்ரீகாந்த், கருணாகரன், தம்பிராமையா, பேபி மானஸ்வி உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். மஹா திரைப்படத்தில் சிம்பு முதலில் கௌரவ தோற்றத்துக்காகவே அழைக்கப்பட்டார். சிம்புக்கு இப்படத்தில் இருந்த ஈடுபாட்டைத் தொடர்ந்து அவர் வரும் காட்சிகள் நீடிக்கப்பட்டன.

இதையடுத்து இப்படம் சிம்பு நடிக்கும் படமாகவே மாறியுள்ளது. இந்நிலையில் இப்படத்தின் டீஸர் தற்போது வெளியாகியுள்ளது.



## இன்றைய நாள்

**மேடம்:** சிலருக்கு பதவி பொறுப்பு கிடைக்கும். நன்மை காணும் நாள். எப்போதோ வரவேண்டிய பணவரவு வரும். உற்சாகம் கூடும். இதுவரை ஏற்பட்ட நெருக்கடி தீரும். பயம் விலகும்.

**இடபம்:** இழுபறி முடிவுக்கு வந்து நிம்மதியாகும். கணவருக்கு/ மனைவிக்கு ஆதாயம் வர வாய்ப்புண்டு. பணியிடத்தில் இருந்து வந்த பிரச்சினைகள் தீரும்.

**மிதுனம்:** பொறுமைக்கு விடை கிடைக்கும். பொறாமை வேண்டாம். பரபரப்புக் குறையும். வேற்று மனிதர்களிடம் கவனம் தேவை. மனதில் பயம் வந்து மறையும்.

**கடகம்:** பெற்றோர் உடல்நலனில் அக்கறை காட்டுவீர்கள். விட்டுக் கொடுத்து போவீர்கள். கலகலப்பான சந்திப்பு உண்டு. உறவினர்களால் நன்மைகள் ஏற்பட வாயப்புண்டு.

**சிம்மம்:** விவகாரம் ஒன்றில் நல்ல முடிவு ஏற்படும். கவனம் சிதறாமல் பணியில் மட்டும் ஈடுபடுங்கள். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த பொறுப்பு நல்லபடியாக முடியும்.

**கன்னி:** பொறாமைக்காரர்கள் வலு விழப்பார்கள். எந்த செயலிலும் சுறுசுறுப்புடன் செயற்படுவீர்கள். புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும்.

**துலாம்:** பிறர் தவறுகளை சுட்டிக் காட்டி சண்டையிடுவீர்கள். தொழில் முதலீடுகளைச் சற்றே தள்ளிப்போடுவது நல்லது. வியாபார ஒப்பந்தப் பேச்சு வார்த்தையை இன்று தவிர்க்கவும்.

**விருச்சிகம்:** திருமண முயற்சியை ஓரிரு நாள்களுக்கு ஒத்திப்போடுங்கள். வாழ்வில் குதூகலம் அடைவீர்கள். கவனமாக பேசுங்கள். எதிர்பார்த்த தகவல் வராது.

**தனுசு:** வியாபாரத்தில் எதிர்பார்த்த பணம் தாமதமாக வரும். வெளியூர் பயணங்களால்பெரியநன்மைஇல்லை. அரச அதிகாரிகளை பகைத்துக்கொள்ள வேண்டாம்.

**மகரம்:** புதிய முயற்சிகளில் சிந்தித்து செயற்படுவது நல்லது. மந்த நிலை இருக்கும். தொழில்/ பணி சீராக நடக்கும். வீண்வதந்திகளை பேசி வம்பில் மாட்ட வேண்டாம்.

**கும்பம்:** முயற்சிகளில் பலன் கிட்டும். உற்சாகமாக இருப்பீர்கள். பிறருக்கு நன்மை செய்ய முயன்று பிரச்சினைக்கு ஆளாகலாம்.

**மீனம்:** குடும்பத்தில் அமைதி நிலவும். பாராட்டு கிடைக்கும். மனதளவில் முன்பை விட நிம்மதியாக இருப்பீர்கள். நீண்ட கால முயற்சியில் நற்பலன் கிடைக்கும்.



## 10 மாதங்களில் 43 முறை கொரோனா

### உயிர் பிழைத்த நபர்..!

பிரிட்டனில் உள்ள 72 வயதான மூத்த குடிமகன் ஒருவர் தற்போது சமூக வலைதளங்களில் வைரல் ஆகி வருகிறார்.
இதற்கு முக்கிய காரணம் இவரது உடலில் அதிக நாள்கள் கொரோனா வைரஸ் தங்கியிருந்தது தான். டேவ் ஸ்மித் என்கிற வாகன பயிற்சியாளரான இவர், கடந்த 10 மாதங்களில் 43 முறை இவரது உடலில் கொரோனா பொசிட்டிவ் அறிகுறி தென்பட்டது. ஏழு முறை இவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் எனவும் கூறியுள்ளார்.
தான் இறக்கப் போகிறோம் என்ற நினைப்பில் ஸ்மித் தனக்கு சவப்பெட்டியை தயார் செய்துவிட்டார். ஆனால் அதிர்ஷ்டவசமாக இவர் இறக்கவில்லை. பத்து மாதங்களாக இவரது உடலில் கொரோனா வைரஸ் மீண்டும் மீண்டும் தாக்கி வெளியேறியுள்ளது. இதன்மூலமாக உலகிலேயே அதிகமுறை வைரஸால் பாதிக்கப்பட்டு அதிலிருந்து விடுபட்ட நபர் என்கிற பெயரை டேவ் ஸ்மித் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனக்கு....

இவ்வாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, சீற்றத்துடன் தெரிவித்தார்.

ஆளும்கட்சியின் முக்கியஸ்தர்களுடன் நேற்று நடத்திய கலந்துரையாடலில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"இந்த நாட்டை அபிவிருத்தி செய்யவும், பாதுகாக்கவும், பொருளாதாரத்தை முன்னேற்றவுமே 69 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் எனக்கு ஆணை வழங்கினார்கள். அந்த ஆணையை நான் ஒருபோதும் உதாசீனம் செய்ய மாட்டேன். அதேவேளை, நாட்டு மக்களுக்கு நான் வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தையும் என் பதவிக்காலத்தில் நிறைவேற்றியே தீருவேன்.

கொரோனாத் தொற்றுப் பரவல் நிலைமையை தடுப்பூசிகள் மூலம் விரைவில் கட்டுப்படுத்துவோம். கொரோனாவால் தடைப்பட்டுள்ள நாட்டின் அபிவிருத்தியையும் பொருளாதாரத்தையும் முன்னேற்றகரமான பாதையில் கொண்டு செல்வோம்.

பஸில் ராஜபக்சவை அமைச்சராக நியமனம் செய்ததில் பெருமகிழ்வு அடைகின்றேன். அவருக்கு வழங்கப்பட்டுள்ள அமைச்சுப் பொறுப்புக்களை அவர் திறம்படச் செய்வார் என்ற நம்பிக்கை அமைச்சரவைக்கு இருக்கின்றது.

அரச கூட்டணிக்குள் இருக்கும் ஒருசில கருத்து முரண்பாடுகளை வைத்துக்கொண்டு எதிரணியினர் தங்கள் அரசியலைக் கொண்டுசெல்கின்றனர். எதிரணியால் பலமிக்க எமது அரசை அசைக்க முடியாது" என்றார். (த-22)

## இணைய...

சன் மேலும் தெரிவித்ததாவது;

தற்போது நடைமுறையில் உள்ள இணையவழிக்கல்வியை நிறுத்துமாறு அனைத்து ஆசிரிய தொழிற்சங்கங்களும் கோரிக்கை விடுத்துள்ளன.

மாணவர்களின் இணையவழி கல்வியில் அரசு படுதோல்வியை சந்தித்துள்ளது. இதனடிப்படையிலேயே மீண்டும் பாடசாலைகளை ஆரம்பிப்பது, பரீட்சைகளை நடத்தி சாதாரணமான நிலையில் எல்லாம் உள்ளது என்றுகூற அரசு முயற்சிக்கின்றது.

மலையக மக்களைப் பொறுத்தவரை அவர்களது ஆயிரம் ரூபா சம்பள விடயம் பெரும் பிரச்சினையாக உள்ளது. அந்த நிலையில் அங்குள்ள மாணவர்களின் இணையவழிக் கல்வி சாத்தியமற்ற ஒன்று. இணைய வசதிகள் அற்ற நிலையில் மரம், கூரைகள் மட்டுமன்றி மலைகளிலும் ஏறி இணைய வசதியை பெறவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு அங்குள்ள மாணவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். இதன்படி பார்த்தால் 15 வீதமான மாணவர்களுக்கு மட்டுமே இணையவழிக் கல்வி கைகொடுக்கின்றது. என்றார். (த-27,20)

## 345 கிலோ...

படகில் கடத்திவந்தனர் என்ற குற்றச்சாட்டில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கடத்தல் தொடர்பில் கடற்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது கஞ்சா மீட்கப்பட்டதோடு, மூவர் கைதுசெய்யப்பட்டனர். கைதுசெய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் மன்னாரைச் சேர்ந்தவர்கள். கடற்படையினரின் விசாரணைகளின் பின்னர் மூவரும் ஊர்காவற்றுறை பொலிஸில் ஒப்படைக்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-27)

## அரசுக்கு எதிராக...

நடைபெற்றது.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த ஆர்ப்பாட்டத்துக்கு பல தொழிற்சங்கங்கள் ஆதரவு தெரிவித்திருந்தன.

இதன்போது அரசுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பப்பட்டன. எதிர்ப்பு பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பேரணியிலும் ஈடுப்பட்டனர்.

"நாட்டின் கல்விக்கட்டமைப்பை சீர்குலைக்கக்கூடிய ஜோன் கொத்தலாவல தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழக சட்டவரைவுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை தனிமைப்படுத்தல் சட்டத்தைப்பயன்படுத்தி அரசு முடக்குகின்றது.

இதனை ஒருபோதும் அனுமதிக்க இயலாது. நாட்டில் இலவசக்கல்வியின் ஊடாகக் கல்வியைப் பெற்றுப்பயனடைந்த, அதேபோன்று இலவசக்கல்வியைப் பாதுகாக்க வேண்டும் என்று கருதும் அனைவரும் இன்று வீதியில் இறங்கிப் போராடுகின்றோம். இன்றுடன் எமது போராட்டம் முடிவடைந்து விடாது. சட்டவிரோத அடக்குமுறைகள் மற்றும் கைதுகள் உட்பட கொத்தலாவல பல்கலைக்கழக சட்டவரைவை கைவிடும்வரை போராட்டம் தொடரும்.

மேலும் தனிமைப்படுத்தல் சட்டத்தின் போர்வையில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோரைக் கைதுசெய்து சிறையில் அடைப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகளையும் உடனடியாக நிறுத்துமாறு வலியுறுத்துகின்றோம்" என்று அங்கு தொழிற்சங்கம் ஒன்றின் உறுப்பினர் தெரிவித்தார்.

இதேவேளை, ஜோன் கொத்தலாவல தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சட்டவரைவுக்கு எதிராகக் கடந்த வியாழக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைதுசெய்யப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டதன் பின்னர் முல்லைத்தீவு விமானப்படை முகாமில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-இ)

## செல்பி...

தல்களால் 60க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, ஜெய்ப்பூரில் உள்ள புகழ்பெற்ற பன்னிரெண்டாம் நூற்றாண்டு கால கோட்டையின் பார்வையாளர் கோபுரம் ஒன்றில் செல்பி எடுத்துக்கொண்டு நின்றிருந்தவர்களே மின்னல்தாக்கி உயிரிழந்தனர். அங்கு கோட்டையைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தவர்களில் 16 பேர் உயிரிழந்தனர். 17 பேர் காயமடைந்துள்ளனர். உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் இள வயதினர். மின்னல் தாக்கியதும் பதற்றமடைந்த பலரும் கோபுரப் பகுதியை விட்டுப் பாய்ந்து வெளியேற முற்பட்டபோது வீழ்ந்து காயமடைந்தனர் என்று ராஜஸ்தான் அதிகாரிகள் கூறியுள்ளனர். கோட்டையின் பார்வைக் கோபுரத்தின் ஒரு பக்கத்தில் அமைந்திருக்கின்ற ஆழமான அகழிக்குள் எவராவது வீழ்ந்தனரா என்பதை அறிய மீட்புப் பணியாளர்கள் தேடுதல் நடத்தியுள்ளனர். கடந்த சில நாள்களாக கடும் வெப்பம் நிலவிய ஜெய்ப்பூர் நகரைப் பலத்த மழையுடன் இடிமின்னல் தாக்குகின்ற காட்சிகள் பல சமூக ஊடகங்களில் வெளியாகி உள்ளன.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் இடம்பெற்ற பல மின்னல் தாக்குதல்களில் பெண்கள், சிறுவர்கள் உட்பட 41 பேர் உயிரிழந்துள்ளனர். இந்தியாவில் பருவப் பெயர்ச்சி மழைக் காலத்தில் இது போன்ற இடிமின்னல் தாக்கங்கள் அதிகரித்துவருகின்றன. ஆண்டுதோறும்

நூற்றுக் கணக்கானோர் அதனால் உயிரிழக்கிறார்கள். ஜூன் தொடக்கம் செப்ரெம்பர்வரை நீடிக்கும் பருவப் பெயர்ச்சிக் காலத்தில் மேலும் மின்னல் தாக்கங்கள் அதிகரிக்கலாம் என்று இந்திய வளிமண்டல ஆராய்ச்சி மையம் எச்சரித்துள்ளது. (த-இ)

## சாவு...

ளனர் என்று அரச தகவல் திணைக்களம் நேற்று அறிவித்துள்ளது. இந்த 31 சாவுகளும் நேற்றுமுன்தினம் பதிவாகியுள்ளன என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் அசேல குணவர்தன உறுதிப்படுத்தியுள்ளார்.

16 ஆண்களும், 15 பெண்களும் இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 533 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, நாட்டில் நேற்று ஆயிரத்து 488 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 லட்சத்து 76 ஆயிரத்து 26 ஆக அதிகரித்துள்ளது. தொற்றிலிருந்து குணமடைந்து ஆயிரத்து 804 பேர் நேற்று வீடு திரும்பியுள்ளனர்.

இதற்கமைய கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 லட்சத்து 46 ஆயிரத்து 241 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக மருத்துவமனைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 26 ஆயிரத்து 252 ஆக அதிகரித்துள்ளது எனவும் அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (த-22)

## பாடசாலைகளை...

பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் நேற்றைய நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

"கொழும்பு பிராந்தியத்தில் உள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் இன்றும் நாளையும் தடுப்பூசி போடப்படும். நாட்டில் 2 லட்சத்து 42 ஆயிரம் ஆசிரியர்கள் உள்ளனர். அவர்களில் பெரும்பாலானோருக்கு ஏற்கனவே தடுப்பூசி போடப்பட்டுள்ளது. என்றார்.

இதற்கிடையில், ஆசிரியர் மற்றும் அதிபர் சங்கங்கள் முன்னெடுத்த போராட்டத்தில் இடம்பெற்ற கைதுநடவடிக்கை காரணமாக இணையவழிக் கற்றல் நடவடிக்கைகளிலிருந்து அவர்கள் விலகியுள்ளமை தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பினார். இதற்கு பதிலளித்த அமைச்சர், சில ஆசிரியர்கள் மட்டுமே இன்று கற்பித்தலிலிருந்து விலக நடவடிக்கை எடுத்துள்ளனர். இருப்பினும், இணையவழிக் கல்வியைத் தொடர வேண்டும் என்றாலும் அது நிரந்தர தீர்வு அல்ல." என்றார். (த-இ)

## பிரதமரின்...

மாவட்டத்தின் பல பகுதிகளுக்குச் சென்ற அவர் வீடமைப்புத் திட்டம் தொடர்பாகவும், காணி விவகாரங்கள் தொடர்பாகவும் பொதுமக்களுடன் கலந்துரையாடினார்.

தற்போது யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வீடமைப்புத் திட்டப் பயனாளிகள் தெரிவு தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், உதயன் பத்திரிகைக்கு மக்களால் தெரிவிக்கப்பட்ட முறைப்பாடுகள் பிரதமரின் இணைப்புச் செயலருக்குக் கையளிக்கப்பட்டிருந்தது. அந்த முறைப்பாடுகள் தொடர்பாகவும், பிரதமர் அலுவலகத்துக்குக் கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பாகவும் பிரதமரின் இணைப்புச் செயலர் நேரடியாகச் சென்று ஆராய்ந்துள்ளார்.

நேரடியாக மக்களிடம் இருந்து கருத்துக்களைப் பெறும் நோக்கில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும், முறைப்பாடுகள், அதிருப்திகள் தொடர்பில் கவனம் எடுக்கப்படும் என்றும், அரசின் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவது தொடர்பில் எதிர்காலத்திலும் நேரடியாக இவ்வாறான களப்பயணங்கள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

## மாகாணங்களுக்கிடையிலான...

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாணங்களுக்கு இடையே அத்தியாவசிய சேவைகளை எந்தவித இடையூறும் இல்லாமல் முன்னெடுக்கும் வகையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, நாளை புதன்கிழமை தொடக்கம் மாகாணங்களுக்கு இடையே அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டும் பொதுப் போக்குவரத்துச் சேவை செயற்படும்.

கடந்த 10ஆம் திகதி சுகாதார அமைச்சு வெளியிட்ட கொரோனாக் கட்டுப்பாட்டு நடைமுறைகளுக்கு அமைய மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடு மேலும் 14 நாள்களுக்கு நீடிக்கப்படுகின்றது. என்றார்.

இதனிடையே, மேல் மாகாணத்தில் நேற்றுத்தொடக்கம் ரயில் சேவைகளின் எண்ணிக்கை 103 ஆக உயர்த்தப்பட்டுள்ளது என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (த-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யூரோ கிண்ணத்தில் இத்தாலி சம்பியன்!

**உரோம், ஜூலை 13**

**யூரோ கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தில் இங்கிலாந்தை வீழ்த்தி கிண்ணம் வென்றது இத்தாலி அணி.**

ஆட்டத்தின் ஆரம்பமே இத்தாலிக்குப் பெரும் அதிர்ச்சி காத்திருந்தது. இரண்டாவது நிமிடத்திலேயே லூக் ஷா இங்கிலாந்தின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார்.

அதன் பின்னர் வேறெந்தக் கோல்களும் எந்த அணியாலும் பதிவாகவில்லை. முதன் பாதியின் முடிவில் 1:0 என்று ஆதிக்கம் செலுத்தியது இங்கிலாந்து.

இரண்டாவது பாதியின் 66ஆவது நிமிடத்தில் லியனாடோ பொனுச்சி இத்தாலி சார்பாக முதலாவது கோலைப் பதிவு செய்து பதிலடி கொடுத்தார். நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றிருந்த நிலையில், மேலதிக நிமிடங்கள் வழங்கப்பட்டன.

அதிலும் மாற்றங்கள் வரவில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வைத்து 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது இத்தாலி. (ம)

## விம்பிள்டன் பகிரங்கம் ஜோகோவிக் சம்பியன்

**லண்டன், ஜூலை 13**

பிரபல ரென்னிஸ் தொடரான விம்பிள்டனில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் கிண்ணம் வென்றார் சேர்பிய வீரரான ஜோகோவிக். நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் ஜோகோவிக்கை எதிர்த்து இத்தாலி வீரர் பெர்டினி மோதினார். முதலாவது செற்றை 6:7 என இழந்தார் ஜோகோவிக். எனினும் அடுத்த மூன்று செற்களையும் முறையே 6:4, 6:4, 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி கிண்ணம் வென்றார். (ம)

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு உட்பட்ட ஓட்டுமடம் சந்தி மானிப்பாய் வீதி, 1ஆம் ஒழுங்கையில் 3 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.
யாழ் நகரிலிருந்து 1 1/2km தூரம்.
(பரப்பின் விலை 5 லட்சம் ரூபா)
தொடர்பு : 076 221 2037, 076 734 1023, 077 064 2661

**மருந்தாளர் தேவை**

**சண்முகா மெடிக்கல்**
இல 54, K.K.S வீதி, சுன்னாகம்.
மருந்தாளர் தேவை ( Pharmacist )
077 717 3691, 021 224 3457

**அலுவலக நிர்வாக உதவியாளர்கள் தேவை**

யாழ் நகரில் இயங்கும் தனியார் கல்வி நிலையம் ஒன்றிற்கு கணினி அறிவுடைய பெண் நிர்வாக உதவியாளர்கள் தேவை.
தொடர்புகட்கு : 077 041 3864 077 426 9166




## விம்பிள்டனில் பார்டி மகுடம்!

**லண்டன், ஜூலை 13**

உலகப் புகழ்பெற்ற பகிரங்க ரென்னிஸ் தொடரான விம்பிள்டனில் மகளிர் ஒற்றையர் பிரிவில் கிண்ணம் வென்றார் பார்டி. ஆஸ்திரேலிய வீராங்கனையான பார்டியை எதிர்த்து பிளிஸ்கோவா மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக இறுதியாட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 6:3 என கைப்பற்றிய பார்டி இரண்டாவது செற்றை 6:7 என இழந்தார். வெற்றியாளரைத் தீர்மானிக்கும் மூன்றாவதும் இறுதியானதுமான செற்றை 6:3 என்ற கணக்கில் கைப்பற்றி கிண்ணம் வென்றார் பார்டி. (ம)

## மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 07 . 1968



மறைவு 12 . 07 . 2021

### திரு. பொன்னம்பலம் தயானந்தன்

**( அதிபர் யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆரம்பப் பாடசாலை )**

"கேணிக்கரை" சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட **பொன்னம்பலம் தயானந்தன்** நேற்று (12.07.2021) திங்கட்கிழமை புவனேஸ்வரித்தாய் பாதம் சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - பூமகள் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற குணரத்தினம் மற்றும் ஐஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும் ஆனந்தரூபி (நீர்ப்பாசனத் திணைக்களம், யாழ்ப்பாணம்)யின் பாசமிகு கணவரும் கதிர்சிகன் (தரம்-10 மானிப்பாய் இந்துக் கல்லூரி), கரிணிகா (தரம்-08 வேம்படி மகளீர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வத்சலாதேவி, வத்சலானந்தன், வத்சலாவதி, சத்தியானந்தன், தயாபாலினி, சிவசக்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜீவரூபி, விஜயரூபி, சாந்தரூபி, பகீரதன், ஶ்ரீதரன், ஞானரூபி, கம்சத்வனி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2021) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மதியம் 1.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"கேணியடி"
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்

தகவல்
குடும்பத்தினர்
021 205 2100

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.07.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.